www.malankaralibrary.com




**ஆசிரியர் : அருட்தந்தை மரிய அற்புதம்**

www.malankaralibrary.com

## 1.செப வாழ்வு

ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேமின் செபவாழ்வு பற்றி விவரி?

1. **சூழலுக்கேற்ப செபிக்க கற்றுக் கொடுத்தல்**

ஆயர் லாறன்சின் தந்தை திரு. ஜஸ்டஸ் 1969-ம் ஆண்டு, ஆயரின் சிறுவயதிலேயே இவ்வுலகை விட்டுச்சென்றார். தாய் திருமதி. விக்டோரியா 23-03-1993 அன்று மரணமடைந்த போது அவர்கள் நினைவு நாளை ஒட்டி பெற்றோர் இருவரின் படத்துடன் ஒரு சிறு படம் அச்சிடப்பட்டது. அத்தோடு சேர்த்து மலங்கரை திருவழிபாட்டு முறையின் "கௌமா" செபமும் சிறு எழுத்துக்களில் அச்சிட்டு அத்தோடு சேர்த்து அனைவருக்கும் வழங்கினார். சாதாரண மக்கள் குறைந்த பட்சம் கௌமா செபத்தையாவது கற்றிருக்க வேண்டும் என்பதற்காக அவர் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்ட ஒரு முறை தான் இது. தன் பெற்றோர் நினைவு வழியாக செபிக்கக் கற்றுக் கொடுத்த ஆயர், செபத்திற்கு தன் வாழ்வில் எவ்வளவு முதன்மையான இடத்தைக் கொடுத்திருந்தார் என்று இதன் வழியாக அறிந்து கொள்ளலாம்.

2. **செபத்தின் குறிக்கோள்**

செபம் என்பது ஆயரைப் பொறுத்த வரையில் நமது திட்டங்களையும் விருப்பங்களையும் கடவுளிடம் திணிப்பதோ, கடவுளுக்கு அறிவுரை வழங்குவதோ அல்ல. செபம் கடவுளின் விருப்பத்தை நாம் ஏற்றுக் கொள்ளச் செய்வது. எனவே உண்மையான செபம் நமது சிந்தனைகள், செயல்பாடுகள், முன்னுரிமைகள், மதிப்பீடுகள், உணர்வுகள், இலட்சியங்கள் அனைத்தும் இயேசுவைப் போன்று மாற்றமடையச் செய்ய வேண்டும். ஆம். செபம் வழியாக ஆயர் லாறன்ஸ் மனத் தெளிவு பெற்றார், மனப்பாங்கில் மாற்றம் ஏற்படுத்தினார் . கண்ணோட்டங்களை இயேசுவோடு நெருங்கியவையாக மாற்றினார். தனது சிந்தனை, சொல், செயல்களை புனிதப்படுத்தி பற்றுறுதி கொண்டார்.

இறைவனைப் புகழ்வதும் இறைவனுக்கு நன்றி கூறுவதும் அவரது செபத்தின் முக்கிய பகுதிகளாக இருந்தன. தன் தாயின் இறுதிச் சடங்கின் போது. "இந்நாட்களில் நான் செபிப்பதெல்லாம் ஒன்றே ஒன்று: தந்தை, மகன், தூய ஆவிக்குப் புகழ் என்பதே அது. ஏனெனில் புகழ்வதற்குரிய காரியங்கள் மட்டுமே என் வாழ்வில் நிகழ்ந்துள்ளன" என்று கூறினார். எத்தனை துன்பங்கள் அவர் வாழ்வைக் குறுக்கிட்ட பின்னும் அவர் இதயம் நன்றியால் எப்பொழுதும் நிறைந்திருந்தது.

அவரைப் பொறுத்தவரையில் செபம் ஒரு சடங்கல்ல, மாறாக வாழ்க்கை பிரச்சனைகளில் அவருக்கு கைகொடுக்கும் ஒரு ஊன்றுகோலாக இருந்தது. செபம் தன் வாழ்வின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு மாற்றாக அவருக்கு இருக்கவில்லை. அல்லது பொறுப்புகளை ஏற்க மனமின்றி மிக எளிதாக அனைத்தையும் ஆண்டவரது பொறுப்பிலே விட்டுவிடுவதும் செபம் அல்ல. தான் விரும்பிய கடவுளை விருப்பமான வழியிலே விருப்பமான நேரத்தில் வழிபடுவதும் செபம் அல்ல. வெற்று வார்த்தைகளை உரக்கக் கூறி உள்ளத்தை தொடாமல் பிறர் காணும் நோக்குடன் செபிப்பதும் செபம் அல்ல. மாறாக ஆயரைப் பொறுத்தவரையில் கடவுளின் விருப்பத்தை தன் வாழ்வில் நிறைவேற்றுவது தான் உண்மையான செபம்.

3. **செபமாலை பக்தி**

நெருக்கடி மேலாண்மை (crisis management) யில் தூய மரியா சிறந்தவர். மரியா மீது ஆயர் கொண்டிருந்த பக்தி அன்றாட வாழ்வில் அவருக்கு பெரும் ஆறுதலாக இருந்தது. எதிர்பாராத நெருக்கடிகள் தன்னுடைய வாழ்க்கையில் வந்த வேளைகளில் அவர் அதிலிருந்து துணிவும், ஆறுதலும், விடுதலையும் பெறுவதற்கு எடுத்துக் கொண்ட வழிதான் ஜெபமாலையை கையிலெடுத்து அவர் மரியாவிடம் செபித்தது. இவ்வாறு அவர் செபிக்கும் பழக்கத்தை பலர் பலமுறை நேரில் கண்டிருக்கின்றனர்.

4. **நற்கருணையின் பகிர்வு வாழ்வு**

பவுலடியார் நற்கருணையை பெறுவதற்கு முக்கிய தகுதியாகக் குறிப்பிடுவது 'பகிர்ந்து கொள்ளும் மனநிலை'. கொரிந்து சபையில் பகிர மனமில்லாத சபையோருக்கு நற்கருணை வழி இயேசுவை உட்கொள்ளலாகாது என்கிறார். அவ்வாறு தகுதியின்றி எவராவது உண்டால்

இயேசுவின் உடலின் மட்டிலும் இரத்தத்தின் மட்டிலும் தவறு புரிந்தவராவர் என்கிறார். (காண் : 1 கொரி 11:27).

கிறிஸ்தவர்களுக்கு இருக்க வேண்டிய சிறந்த 'பகிர்வு மனம்' நம் ஆயருக்கு நிரம்பவே இருந்தது. வெளியூர்களுக்கோ, நாடுகளுக்கோ அல்லது ஒரு நிகழ்வுக்கோ சென்று திரும்பியவுடன் தான் பெற்றுக்கொண்ட அறிவை தம்முடன் இருக்கும் மக்களுடன் சிறிதும் பெரிதுமான வட்டங்களில் பகிர்ந்து கொள்வது அவரது ஒரு வழக்கமாக இருந்தது. அவர் அறிந்த உண்மைகளை பிறருக்கும் எடுத்துக்கூறி பிறரையும் உயர்ந்து சிந்திப்பதற்கும் பரந்து செயல்படுவதற்கும் உதவுவார். பகிர்தல் என்பது பொருளையும் பணத்தையும் பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல அறிவையும் அனுபவங்களையும் பங்கிட்டு கொள்வதும் முக்கியமான பகிர்வே என்று அன்றே அவர் ஆழமாய் நம்பியிருந்தார்.

5. **நற்கருணை பக்தி**

நற்கருணை நாதரிடம் ஆயருக்கு இருந்த பக்தி மிகப்பெரியது. நீண்ட நேரம் தனிமையாக இருந்து நற்கருணையில் பிரசன்னமாயிருக்கும் ஆண்டவரோடு அவர் உரையாடினார். நற்கருணை பெறும்போது அது உண்மையில் ஒரு இறை அனுபவமாக மாற வேண்டும் என்று விரும்பினார். குறிப்பாக முதன் முதலில் புதுநன்மை எடுக்கும் பிள்ளைகள் தகுந்த தயாரிப்புடன் இயேசுவை பெற வேண்டுமென்று அவருக்கு கண்டிப்பு இருந்தது ஆனால் நடைமுறையில் முதல் திருவிருந்து விழா ஆடம்பரமாக, கொண்டாட்டமாக, வெளிப்படையானதாக மட்டும் மாறி வரும் கலாச்சாரத்தையும் ஆயர் அறிந்திருந்தார். எனவே புது வழக்கத்தை ஆரம்பித்தார்..

புது நன்மை பெற்றுக்கொள்ளும் பிள்ளைகள் குறிக்கப்பட்டிருக்கும் நாளுக்கு முந்தைய நாள் தகுந்த தாயரிப்போடு நற்கருணை பெற்று செபித்து, தியானித்து, இறை அனுபவம் பெறும் முறையை அறிமுகப்படுத்தினார். அப்போது புது நன்மை கொண்டாட்ட நாளில் எடுக்கப்படும் புகைப்படம், வீடியோ மற்றும் வெளி ஆரவாரங்களும், ஆடம்பரங்களும் அவர்களின் கவனத்தை சிதறடிக்காது, மாறாக பக்தியுடன் செபித்து, தன்னிடம் வந்து குடிகொள்ளும் இயேசுவிடம் உரையாடி, உறவாடி மகிழ முடியும் என்ற நல்ல கருத்தை பிள்ளைகளுக்கு கற்பித்தார்.

6. **தனிசெபமும் பொது செபமும்**

தனிப்பட்ட செபத்திற்கும் திருச்சபையின் பொதுவான வழிபாட்டு செபங்களுக்கும் ஒன்றுபோல முக்கிய இடம் கொடுத்தவர் ஆயர். இறைமக்கள் வழிபாட்டில் பங்கு பெறும்போது இணைந்து ஒன்றுசேர உரக்க செபித்து, இனிமையாக பாடி இறைவனைப் புகழ வேண்டும் என்று அவர் விரும்பினார். இதற்காக பல பயிற்சிகளும் கொடுத்து வந்தார். 1965-ம் ஆண்டு மலங்கரை கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப் பேராலயமாகிய பட்டம் தூய மரியன்னை பேராலயம் அர்ச்சிக்கப்பட்ட போது அன்றைய தந்தை லாறன்ஸ் தான் முன்னின்று பாடகர் குழுவை வழிநடத்தினார். தாமே இசை அமைத்த திருப்பலி பாடல்கள் தான் அன்று பாடப்பட்டன. இதுவே மலங்கரை திருப்பலிக்கு இசை அமைக்கும் முதல் முயற்சி என்றால் வழிபாட்டு செபங்களில் அவர் கொண்டிருந்த ஆர்வம் நன்கு புலப்படும்.

7. **ஆயரின் விருதுவாக்கு**

ஆயரைப் பொறுத்தவரையில் கடவுளின் விருப்பத்தை தன் வாழ்வில் நிறைவேற்றுவது தான் உண்மையான செபம். எனவேதான் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயராக பொறுப்பேற்றுக் கொண்டபோது அவர் எடுத்துக்கொண்ட விருதுவாக்கு "உம் விருப்பம் என் ஆனந்தம்' என்பது. இவ்விருதுவாக்கு அவர் திடீர் என்று தேர்ந்து கொண்டதல்ல. தன் வாழ்நாள் முழுவதும் அவர் வாழ்ந்து காட்டிய உண்மை. தனிப்பட்ட வாழ்விலும் பணி வாழ்விலும் எத்தனையோ நெருக்கடிகள் ஏற்பட்ட போதும் இறைச் சித்தத்திற்கு தன்னை கையளித்துக் கொண்டு மன உறுதியுடன் துன்பங்களை தாங்கிக் கொண்ட நிகழ்வுகள் எத்தனை எத்தனை. இயேசு தன் பாடுகளையும் இறப்பையும் முன் கண்டு அனுபவித்து கெத்சமணித்தோட்டத்தில் 'என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக்கிண்ணம் என்னை விட்டு அகலட்டும், ஆனால் என் விருப்பப்படி அல்ல, உம்

விருப்பப்படியே நிகழட்டும்' என செபித்தார் (காண் மத். 26:36-46) இயேசுவின் மனநிலையை ஆயரும் தன் வாழ்வில் பிரதிபலித்தார்.

உலகம் நினைப்பதை விட செபம் வழியாக பெரிய காரியங்களை சாதிக்கலாம் என்று அவர் அனுபவம் வழியாக பறைசாற்றினார். இடைவிடாமல் செபியுங்கள் என்ற பவுலடியாரின் கூற்றிற்கிணங்க அவரது வாழ்வே ஒரு செபமாக இருந்தது. இறை பராமரிப்பில் முழுமையாக நம்பி வாழ்ந்த அவர் ஒரு குருவாக மாறிய பின் தன் குடும்பத்தாருக்கு எந்த உதவியும் செய்வதில் எவ்வித ஆர்வமும் காட்டவில்லை. "கடவுள் என்னை நற்செய்திப் பணிக்காக அழைத்துள்ளார். எனவே என் குடும்பத்தாரின் தேவைகளை கடவுளே அவரது விருப்பப்படி நிறைவேற்றுவார்" என்று உறுதியாக நம்பி இறுதி வரை வாழ்ந்தார்.

## 2. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேமின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பற்றி எழுதுக?

### 1. முன்னுரை

கடவுள் அழகிய இவ்வுலகைப் படைத்து அது அழகாய் இருப்பதாய் கண்டார். உலகும் அதிலுள்ள அனைத்தும் ஒழுங்காக அழகாக நன்றாக படைக்கப்பட்டன. அனைத்தையும் மனிதனுடைய நன்மைக்காக கடவுள் அவனுக்கு கொடையாக கொடுத்து அதை பேணி வளர்க்கும் பொறுப்பையும் அளித்தார். பிரபஞ்சத்தையும், பூமியையும் அதிலுள்ள அனைத்தையும் காத்து பராமரிக்க வேண்டியவன் மனிதன்.

கடவுள் அவற்றையெல்லாம் மனிதர்களின் பாதுகாப்பில் விட்டு வைத்துள்ளார். ஆனால் இன்றைய காலகட்டத்தில் சுற்றுச்சூழல் மாசுபாட்டால் அழிந்துக் கொண்டிருக்கும் மனித வாழ்வில், மறுமலர்ச்சி ஏற்படுத்த ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் அவர்கள் சுற்றுச்சூழலை எவ்வாறு பாதுகாத்தார் என அறிவது நமக்கு பயன் கொடுக்கும்.

### 2. சுற்றுச்சூழல் பாதுகாப்பதன் அவசியம்

சுற்றுச்சூழல் என்பது நம்மைச் சுற்றியுள்ள பகுதிகளாகும். இதில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் ஒன்று மற்றொன்றை சார்ந்து வாழுகின்றன. இச்சார்பு வாழ்க்கையில் ஒன்று பாதிக்கப்படும் பொழுது மற்றவை அனைத்தும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. தாவர இனங்கள் தயாரிக்கின்ற ஆக்ஸிஜன் மனிதன், விலங்குகள் உயிர் வாழ காரணமாக இருக்கின்றன. உயிர்களின் உருவாக்கத்திற்கும் அதன் வாழ்விற்கும் தேவையான பிறிதொரு பொருளே நைட்ரஜன். தாவரங்களால் சேகரிக்கப்படும் நைட்ரஜன் உணவு சங்கிலியின் வழியாக மனிதனை வந்தடைகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கடவுளின் கொடையை நம் சுயநலத்திற்காக அழித்து வருகின்றோம். இயற்கை வளங்கள் பலவும் இன்று செயற்கை வளங்களாக மாறி வருகின்றன. மனிதர்களான நாம் வாழ்வதற்காக கடவுளால் உருவாக்கப்பட்ட இல்லமே இந்த அழகிய பூமி, இதை பாதுகாப்பது நம் கடமை ஆகும்.

### 3. இயற்கையில் இறைபிரசன்னம்

இயற்கையில் இறைபிரசன்னம் கண்ட நம் ஆயர், இயற்கையின் அழகையும், மரம், செடி, கொடிகளையும் பராமரித்து பாதுகாப்பதில் கவனம் செலுத்தினார். உடலில் உறுப்புக்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நாம் அறிவோம், அதை போன்று செடிகளுக்கும் அதனுடைய கிளைகள் உறுப்புக்கள் போன்றவை என்பதை வலியுறுத்தினார். கண்களுக்கு குளிர்ச்சி தருவதும், நல் மணம் பரப்புவதும், நோய்களுக்கு மருந்தாவதுமாகிய பூச்செடிகள், மருத்துவ குணம் கொண்ட தாவரங்கள் பலவற்றை நட்டு வளர்த்தார். ஒரு மரம் வளர பல ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் அதனை சில நேரங்களில் வேரோடு பிடுங்கி எறிகின்றனர். பல மரங்களை நட்டு வளர்க்க வேண்டும் என்று ஆயர் வலியுறுத்தினார்.

மரங்களையும் கொப்புகளையும் வெட்டுவதிலே பெரிய தயக்கம் ஒருபுறம். புது மர கன்றுகளை நடுவதிலே தணியாத தாகம் மறுபுறம். பெருகி வரும் மக்கட் தொகை. இதன்

www.malankaralibrary.com

பலனாய் பல காடுகள் அழிந்து வருகின்றன. இதனைக் கண்டு மனம் வருந்திய நம் ஆயர் பல புதிய மரக்கன்றுகளை நட்டு வளர்த்தினார்.

இதுதான் இயற்கையை நேசித்த ஆயர் அவர்கள். 'படைப்பனைத்தும் ஆண்டவரை புகழ்ந்தேத்துகின்றன' என்ற திருப்பாடல் ஆசிரியரின் கூற்றிற்கிணங்க இயற்கையில் இறைவனைக் கண்டவர் அவர்.

**4. மரத்தை வெட்டவிடாமல் வண்டி ஓட்டியவர்**

அவர் ஆரம்பித்து ஆர்வமுடன் பணியாற்றிய கிறிஸ்துவிளாகம் ஆலய வளாகத்திற்கு அடிக்கடி தமது பழைய ஜீப்பில் வருவதுண்டு, கேட் உள்ளே நுழையும்போது ஒரு கொன்றை மரம் சற்று இடையூராக நின்றிருந்தது. ஓட்டுநர்கள் சாதாரணமாக சற்று உரசாமல் வாகனத்தை உள்ளே கொண்டு செல்வதில்லை. எனவே இடையூறாக இருக்கும் இம்மரத்தை வெட்டிவிடுவோம் என்று ஆலோசனை சொல்லப்பட்டது. அவ்வளவுதான் மரத்தை வெட்டும் பேச்சுக்கே இடமில்லை என்று சொல்லி தானே ஜீப்பை ஒட்டி லாவகமாக வெளியேற்றி, உள்ளேக் கொண்டு வந்து காட்டினார் அவர்.

**5. மருந்துவாழ்மலையில்**

மருந்துவாழ்மலை அடிவாரத்தில், நம் மறைமாவட்டத்துக்கு சொந்தமாக நிலத்தை வாங்கினார். பல்வேறு மூலிகைகளுக்கு சொந்தமான அப்பகுதியில் ஒவ்வொரு செடியையும், ஏன் கூர்மையான முட்களைக் கொண்ட 'உடை'யைக்கூட பேணி பாதுகாத்து வந்தார்.

ஓய்வு நேரங்களில் அங்கே சென்று தானும் பிறருடன் சேர்ந்து மண்ணைப்பக்குவப்படுத்துவதிலும், செடிகளை பராமரிப்பதிலும், நீர்தேக்கங்களை ஆழப்படுத்துவதிலும் ஈடுபட்டார். மழையிலும் வெயிலிலும் அவர் தம் சொந்த கரங்களால் பணிசெய்து மண்ணையும், மரங்களையும் நேசித்தார். மரங்களை வெட்டுவது, செடிகளை அழிப்பது, நீர் நிலைகளை மூடுவது போன்ற இயற்கை விரோத செயல்களை கண்டிப்பாக தவிர்ப்பதில் அன்றே அவர் உறுதியாய் இருந்ததோடு பிறரை அவ்வாறே செயல்பட அறிவூட்டினார்.

இதன் பின்னணியில் தான் கிறிஸ்து பிறப்பு நிகழ்வை இம்மலைக்குகையில் உயிருள்ள மனிதர்களால் நடத்திக்காட்டி கூடியிருந்தவர்களை மெய்சிலிர்க்க வைத்தார். பல ஆயிரம் பணம் செலவழித்து பல வருடங்கள் மட்காத பிளாஸ்டிக், தெர்மாகோல் போன்ற பொருட்களினால் கட்டப்படுகின்ற குடில்களை தவிர்த்து இயற்கையோடு இணைந்து இக்குகையில் இயேசுவின் பிறப்பு விழாவை கொண்டாடினார்.

**6. கன்னியாகுமரியில்**

இயற்கையில் இறைபிரசன்னம் உணரும் ஆயர், கடலையும், மலைகளையும், சமவெளிகளையும், இறைவழிபாட்டு இடங்களாக மாற்றினார். மேலும் கன்னியாகுமரி மலங்கரை பவன் வளாகத்தில் காணப்பட்ட வேப்பு மரங்களை ஒரு கொப்பு கூட வெட்டப்படாது பராமரித்தது மட்டுமல்ல, காலியான இடங்களில் புது கன்றுகளை நட்டு வளரச் செய்வதிலும் விழிப்பாயிருந்தார். திபேரியா கடலில் உயிர்த்த கிறிஸ்து, காட்சி கொடுத்த நிகழ்ச்சியை இயற்கையாகவே செயலாக்கி காட்டினார்.

**7.வரவேற்பு நிகழ்வுகளில்**

பல வெடி சத்தங்களுக்கு மத்தியில் ஒரு ஆடம்பரமான திருவிழாவை கொண்டாடுவதை வெறுத்த ஆயர் இயற்கைக்கு இடையூறு இல்லாமல், எளிமையான ஒரு சிறிய குடிலில் கூட அமர்ந்து ஜெபிக்கலாம் என்ற கருத்தை வலியுறுத்தினார். பூங்கொத்துகள், பூச்செண்டுகள் ஆகியவற்றை கொடுத்து தன்னை வரவேற்பதை வெறுத்த நம் ஆயர், அதற்கு பதிலாக பல பூச்செடிகளை நன்கொடையாக வாங்கி பல மறைபரப்பு தளங்களிலும் நல் மணம் பரப்பு செய்தார்.

**8.சுற்றுச்சூழலின் அவசியம்**

மனிதனின் பிறப்பிற்கும் உயிர் வாழ்விற்கும் அவன் இந்த உலகில் உள்ள அனைத்தையும் சார்ந்து வாழ வேண்டும். கடவுளின் படைப்பில் மிகவும் நல்லதான மனிதனே மிக அதிகமாக அவற்றை சார்ந்து வாழ்கின்றான். இயற்கை வளங்களாகிய மரம்,

செடி, கொடி முதலிய தாவர வகைகளும் அவற்றை உறைவிடமாகக் கொள்ளும் பல்வேறு விலங்கு உயிரினங்களும் அதிகமாகக் காணப்படும் இடமே இந்த சுற்றுச்சூழல். பழங்களின் தோலில் சத்து மிகுந்துள்ளன என்பதைக் கூறி வீணாக்காமல் காய்கறிகள், பழங்கள் அனைத்தையும் அருந்துமாறு அறிவுரை வழங்கினார்.

ஒவ்வொரு ஆண்டும் உலக சுற்றுச்சூழல் தினம் ஜூன் 5-ம் நாள் கொண்டாடப்படுகிறது. இத்தருணத்தில் இயற்கை மற்றும் சுற்றுச்சூழலைப் பற்றிய நமது கண்ணோட்டம் எவ்வாறு காணப்படுகிறது? எதிர்கால தலைமுறையினருக்கு நாம் விட்டு செல்வது என்ன? சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

**9.பல்லுயிரிகள் பராமரிப்பு**

பல்லுயிரிகளை பராமரிப்பதில் ஆயர் அன்றே தனிக் கவனம் செலுத்தினார். இயற்கையிலும் பறவைகளிலும், விலங்குகளிலும் கடவுளைக் கண்டவர் தூய பிரான்சிஸ் அசிசியார். எனவேதான் அவர் அவற்றை 'சகோதரா ...... சகோதரி' என அழைத்தார். இன்று மனிதன் தன்னை மட்டும் வாழ வைக்க எவ்வுயிரையும் அழித்துவிடும் பழக்கத்திற்கு வந்துவிட்டது வருந்தத்தக்கது. ஆண்டுதோறும் பல வகை உயிரிகள் அழிந்து கொண்டே செல்கின்றன, 'இவை யாவும் மனித வாழ்வுக்குத் தேவையானவை. எனவே இவற்றை அழித்து விடாது பராமரிப்போம். அவ்வாறு மனித உயிரை வாழவைப்போம் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் ஆயர் லாறன்ஸ் அன்றைய நாட்களிலேயே இவ்வுண்மையை அறிந்திருந்தார். தம் அறையில் அங்கும் இங்குமாக ஓடும் சிலந்தி, பல்லி போன்ற பிராணிகளை பூச்சிக் கொல்லி வழியாகவோ அடித்தோ கொல்ல முயன்றால் 'அவ்வாறு செய்ய வேண்டாம்; நமக்கு தீங்கு இழைக்காதவரை அவற்றிற்கு நாமும் தீங்கு இழைக்க வேண்டாம்' என அறிவுறுத்துவார். பல்லுயிர் பராமரிப்பில் அன்றே அவர் ஆர்வம் காட்டியிருந்தது நமக்கு வியப்பளிக்கின்றது.

**10. திருத்தந்தை பிரான்சிஸ்**

அன்று ஆயர் உறுதிபட எடுத்துரைத்த கருத்துக்கள் இன்றைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வலியுறுத்திக் கூறப்படுகிறது. இயற்கை வளங்களை பயன்படுத்தி வரும் தலைமுறையினரை கருத்திற்கொண்டு பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். மனிதனின் பேராசையினாலும் பொறுப்பற்ற செயல்பாட்டாலும் "பூமி வெப்பமடைந்து" அசாதாரணமான "பருவ கால மாற்றம் ஏற்படுகிறது. இயற்கைக்கு எதிராக இழைக்கப்படும் தீங்கு மக்களுக்கு, குறிப்பாக ஏழைகளுக்கு எதிராக இழைக்கப்படும் தீங்கு. ஏனெனில் இயற்கையே அவர்களின் வாழ்வாதாரம். பருவமாற்றத்திற்கு முக்கிய காரணம் மனிதனே என குறிப்பிடும் திருத்தந்தை, இயற்கையை சுரண்டி வளர்த்த, வல்லரசுகளே இந்நிலையை சீராக்கும் பொறுப்பை முக்கியமாக எடுக்க வேண்டும் என அறிவுறுத்துகிறார். சுற்றுச்சூழல் அழிவு உலகளாவிய பட்டினிக்கு இட்டுச்செல்லும் என எச்சரிக்கின்றார். அண்மையில் திருத்தந்தை வெளியிட்டுள்ள "உமக்கே புகழ்" என்ற மடல் இவ்வுண்மைகளை தெளிவாக விளக்குகின்றன.

**11. முடிவுரை**

பல்வேறு பயன்களைத் தரும் சுற்றுச்சூழலை பயங்கரமான அழிவுக்கு உட்படுத்துவதனால் ஏற்படும் விளைவுகளை சந்திப்பது மனிதர்களாகிய நாமும், நம் தலைமுறையினரும் தான் என்பதை உணர்ந்து, தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்ட நம் ஆயரின் வழிமுறைகளைப் பின்பற்றி, சுற்றுச்சூழலின் வளர்ச்சிக்கு தேவையான முயற்சிகளை எடுப்போம், இயற்கை வளங்களைப் பாதுகாப்போம், எதிர்கால சந்ததியினருக்கு வளமான பூமியை விட்டு செல்வோம். புதிய மதிப்பீடுகளோடு, திட்டங்களோடு செயலாற்ற முயற்சிப்போம்.

## 3. தியாக வாழ்வு

ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேமின் தியாக வாழ்வு பற்றி விளக்குக?சூழல்

**1. முன்னுரை**

www.malankaralibrary.com

இயேசு அனைத்து மக்களுக்கும் நற்செய்தியாக இருக்கின்றார். பசித்தவருக்கு உணவாக, தாகமெடுப்போருக்கு தண்ணீராக, அடிமைகளுக்கு விடுதலையாக, நோய்வாய்பட்டோருக்கு நலமாக, அறிவிலிகளுக்கு ஞானமாக, வழிதவறியோருக்கு நேர்வழியாக, துன்புறுவோருக்கு ஆறுதலாக, இறந்துகொண்டிருப்பவருக்கு புதுவாழ்வாக "எல்லோருக்கும் அனைத்துமாக" விளங்குபவர் இயேசு என மார் எப்ரேம் உறுதியாக நம்பியிருந்ததார். ஆகவே சமூகத்தில் சாதி, மத, மொழி வேறுபாடுகளின்றி அனைவரையும் அன்பு செய்து அனைவருக்கும் பணி புரிய அவரால் முடிந்தது. ஆயர் போதித்த இயேசுவின் விழுமியங்களாகிய அன்பு, சேவை, மன்னிப்பு, சகோதர உறவு, ஒற்றுமை, அமைதி ஆகியவற்றை அவர் வாழ்ந்து காட்டினார்.

**2. இறை இரக்கத்தின் பக்திமுயற்சி**

'இறை இரக்கத்தின் பக்தி' நம் மறைமாவட்டத்தில் 1993-ம் ஆண்டு ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் அவர்களின் அனுமதியோடும் ஆசியோடும் தொடங்கப்பட்டது. இப்பக்திமுயற்சியை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் இறை இரக்கத்தின் திருத்தூதர் என அறியப்படுகின்ற புனித பவுஸ்தீனா (1905-1938) ஆவார். இப்புனிதை தன் வாழ்வில் அன்றாடம் கடைபிடித்து வந்த 'சிலுவைப்பாதை' நம் ஆயரின் வாழ்விற்கும் மிக பொருத்தமாக இருந்தது. இப்புனிதையின் வார்த்தைகளில் அன்றாட சிலுவை இவையே:

1. என்னுடைய முயற்சிகளுக்கான எதிர்ப்பு
2. கூட்டு வாழ்வினுடைய சிரமங்கள்
3. என்னுடைய நோக்கத்தை தவறாக விளக்குதல்
4. பிறரிடமிருந்து ஏற்படும் இகழ்ச்சி
5. ஈவிரக்கமின்றி பிறரால் நடத்தப்படுதல்
6. ஆதாரமற்ற சந்தேகங்கள்
7. எனது உடல் நலக்குறைவு
8. எனது இயலாமை
9. என்னையே ஒறுத்தல்
10. எனக்காக நானே இறப்பது
11. எதிலும் நான் அங்கீகரிக்கப்படாதிருத்தல்
12. எனது திட்டங்கள் அனைத்தும் தலை கீழாக்கப்படுதல்

இவற்றை அனைத்தும் தன் வாழ்வில் அனுபவித்து தம் சிந்தனைகள், சொற்கள், செயல்கள் ஆகியவற்றைப் தொடர்ச்சியாக தூய்மைப்படுத்திக் கொண்டார் நம் ஆயர்.

**3. துன்பம் பற்றிய ஆயரின் கருத்துக்கள்**

ஆயர் அவர்கள் ஆழமான இறையியல் சிந்தனைகளைக் கொண்டிருந்தார். அன்றாட வாழ்க்கை சூழ்நிலைகளிலிருந்து கண்டும் கேட்டும் அனுபவித்தும் அறிந்தவற்றை விசுவாச ஒளியிலும் விவிலிய ஒளியிலும் சிந்தித்து செபித்து தனக்கென ஒரு பாணியை ஏற்படுத்திக்கொண்டிருந்தார். மார் இவானியோஸ் கல்லூரியில் வைத்து நடந்த குருக்களுக்கான நற்செய்திக் கூட்டத்தில், ஒரு நாள் நம் ஆயருக்கு பேச வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. அவரது பேச்சின் ஒரு பகுதி இவ்வாறு இருந்தது. "மூவொருக் கடவுளில் தந்தைக்கும் தூய ஆவிக்கும் துன்பமின்றி மகனாகிய இயேசுவுக்கு மட்டும் அத்தனை துன்பங்களும் கொடுக்கப்பட்டது" என்று கூறி கேள்வி எழுப்பியபோது அரங்கிலிருந்த அத்தனை குருக்களும் 'ஓ' என்று சிரிப்பொலி முழக்கினர் துன்பத்தின் பொருளையும், துன்பத்தை சந்திக்கும் முறையையும் லாவகமாக எடுத்துக் கூற அவரால் முடிந்தது. ஏனெனில் அவர் துன்பத்தை அதிகமாகவே அனுபவித்து வாழ்ந்தவர். துன்பங்கள் அவருக்கு மன உறுதியைக் கொடுத்தன; ஆன்மீக வலிமையை அளித்தன.

**4. மாணவர்களுக்கு ஆயரின் அறிவுரை**

வாழ்வில் எவ்வளவு உயர்ந்த இலட்சியங்களை கொண்டிருந்தாலும் தோல்வியும் பின்னடைவுகளும் ஏற்படும்போது பொதுவாக நாம் தளர்ந்து விடுகிறோம். அனைத்து பாடங்களிலும் முதலிடம் பெற்று உயர்ந்த இடத்தை அடைய வேண்டும் என்று கடினமாக

உழைக்கின்ற மாணவ மாணவியர் பலர் இன்று உண்டு. நீண்ட நாட்கள் கண்விழித்து கற்றவை அனைத்துவற்றையும் நன்முறையில் தேர்வு எழுதி உயர்ந்த மதிப்பெண்களுக்காக காத்திருக்கின்றனர். சற்றும் எதிர்பாராதவாறு மதிப்பெண்கள் குறைந்து விட்டது என்றால் அதை அவர்களால் ஏற்றுக்கொள்ளவே முடிவதில்லை. விரக்தியின் விளிம்பை எட்டி பலர் தற்கொலை முயற்சி செய்வதை நாம் இன்று பல இடங்களில் பார்க்கின்றோம். எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி, எப்படியும் வெற்றி என்ற தாரக மந்திரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதனுக்கு தோல்வியை எண்ணிப்பார்க்கவே முடியவில்லை. இங்குதான் ஆயரின் வாழ்வு நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது.

நீண்டகால துன்பங்களுக்கும் தோல்விகளுக்கும் உள்ளாக்கப்பட்ட அவர் இயேசுவின் சீடராய் இருப்போருக்கு துன்பத்தின் பொருள் என்ன என்பதை உணர்ந்து கொண்டார். கடவுளை நம்பி தோல்வியையும் துன்பத்தையும் தாங்கிக் கொண்டு அவற்றின் பொருளை உணர்ந்தவர் அவர். அவை வழியாக மன உறுதியையும், துணிவையும் ஆன்மீக வலிமையும் பெற்றவர். "ஒருவர் அனியாயமாக துயருறும்போது கடவுளை மனதில் கொண்டு அதை பொறுமையோடு ஏற்றுக் கொள்வாரானால் அதுவே அவருக்கு உகந்ததாகும். குற்றம் செய்ததற்காக நீங்கள் அடிக்கப்படும்போது பொறுமையோடு இருப்பதில் என்ன சிறப்பு? மாறாக நன்மை செய்தும் அதற்காக பொறுமையோடு துன்புற்றால், அது கடவுளுக்கு உகந்ததாகும். கிறிஸ்துவும் உங்களுக்காக துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். எனவே நீங்கள் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள் ... இதற்காகவே அழைக்கப்பட்டுள்ளீர்கள்" (1 பேதுரு 2:19-21) என்ற தூய பேதுருவின் அறிவுரை இங்கு நினைத்தற்குரியது.

**5. அன்பு தியாகத்தின் மறுவடிவம்**

அன்னைத்தெரேசா அன்பு செய்யும் முறையைப் பற்றி கூறும்போது 'உன்னை புண்படுத்துபவரை அன்பு செய் என்று கூறுவார். அன்பு துன்பத்தாலும் தியாகத்தாலும் உறுதிப்படுத்தப்படுகிறது, இதைத்தான் இயேசு, "இந்த ஏழைக் கைம்பெண் அனைத்துரையும் விட மிகுதியான காணிக்கைப் போட்டிருக்கிறார் என உண்மையாகவே உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து காணிக்கைப் போட்டனர். இவரோ தமக்கு பற்றாக்குறை இருந்தும் தம் பிழைப்புக்காக வைத்திருந்த அனைத்துவற்றையுமே போட்டு விட்டார்" என்றார் (லூக் 21: 1-4). துன்புற்று, தியாகம், செலுத்தும் காணிக்கை கடவுள் முன் ஏற்கப்படுகிறது.

ஆயர் லாறன்ஸ் தன் வாழ்வில் தியாக காணிக்கை செலுத்த தவறியதில்லை. துன்பத்தை ஏற்று பற்பல தியாகங்கள் செய்து அவற்றையே ஆண்டவருக்கு காணிக்கையாக அவர் சமர்ப்பித்தார். தன் வாழ்நாளில் மகளீர்க்கென்றும், பிள்ளைகளுக்கென்றும், முதியவருக்கென்றும், மாற்றுத்திறனாளிகளுக்கென்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தினார். ஆனால் இவற்றின் மத்தியில் தனிப்பட்ட தியாகங்கள் வழியாக துன்புறுவோருக்கு உதவினார்.

**6. தியாகத்தின் செயல் வடிவம்**

தியாகம் என்பது தனக்கு விருப்பமான ஒன்றை துறப்பது... வேண்டாமென வைப்பது. அவ்வாறு கிடைக்கும் தொகையை தேவையில் உழலுகின்ற நபர்களுக்கு பகிர்ந்தளிப்பது. இச்செயலைச் செய்த பின்னர் ஆண்டவருக்கு அதை காணிக்கையாக்குவது. இக்காணிக்கையை கடவுள் முழமனதுடன் ஏற்றுக் கொள்கிறார். ஒரு ஆயருக்கு இயல்பாக உரிமைப்பட்ட எந்த வசதியையும் ஆடம்பரத்தையும் அவர் அனுபவித்ததில்லை. வசதியான கட்டிடமோ, பயன்படுத்தும் பொருட்களோ, பாதுகாப்பான சொகுசு வாகனங்களோ, விலை உயர்ந்த ஆடைகளோ அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இவற்றை அனைத்தும் அவர் மனமுவந்து துறந்தார். பவுலடியார் கூறுவது போல, நற்செய்தி பணியாளருக்கு உரிய உரிமையை தாமாக விட்டுக் கொடுத்தவராய் வாழ்ந்தார் நம் ஆயர். இவ்வாறு தாம் சேமித்த செல்வம் ஏழை எளிய மக்களை முன்னேற்ற செலவிடப்பட்டது. இவ்வாறு செலுத்திய தியாக காணிக்கையை கடவுள் ஏற்று அவரை நிறைவாக ஆசீர்வதித்தார்.

www.malankaralibrary.com

**7. முடிவுரை**

இவ்வாறு அன்றாட வாழ்வில் சிறுசிறு விருப்பங்களையாவது துறந்து அதனால் கிடைக்கும் பணத்தை நம்மைவிட ஏழ்மை நிலையில் துன்புறுவோருக்காக செலவிட ஆயர் நமக்கு ஒரு சிறந்த முன் மாதிரியை காட்டித் தந்துள்ளார். இறைவனுக்கு தியாக காணிக்கை செலுத்துவதில் பிள்ளைகள் முதல் பெரியவர் வரை அனைத்து தரப்பினரும் கடமைப்பட்டுள்ளனர். நம் தேசத்தந்தை மகாத்மா காந்தியும் "தியாகமற்ற வழிபாட்டை" தலையான பாவமாக சுட்டிக்காட்டுகிறார்.

## 4. ஊடகங்களின் பயன்பாடு

ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேமின் ஊடகங்களின் பயன்பாடு பற்றி எழுதுக?

1. **முன்னுரை**

இன்று ஊடகங்கள் சக்தி வாய்ந்தவையாக உள்ளன. அவை மக்களில் ஏற்படுத்தும் தாக்கம் மிகப்பெரிது. ஊடகங்களின் வளர்ச்சி நம் நாட்டில் அதிவிரைவாக நடந்தது எனலாம். மக்களின் சிந்தனை. செயல்பாடுகள், வாழ்க்கை முறை மற்றும் முன்னுரிமைகள் ஆகியவைகளை ஊடகங்கள்தான் பெரும்பாலும் நிர்ணயிக்கின்றன என்ற நிலைக்கு நாம் வந்துவிட்டோம். ஏனெனில் செய்தித்தாள், வார, மாத இதழ்கள், வானொலி, திரைப்படம், கணிப்பொறி, தொலைக்காட்சி, கைபேசி, மின்னஞ்சல், முகநூல், இணையதளம் ஆகிய தொடர்புக்கருவிகளால் ஏற்படும் நன்மைகளைக் கண்டு மகிழ்வதைவிட தீமைகளைக் கண்டு வேதனைப்படுவோர் ஏராளம். இருப்பினும் தொடர்புக் கருவிகளைத் தவிர்த்த ஒரு வாழ்க்கை நமக்கு இல்லை என்ற அளவுக்கு இவை நம் வாழ்வின் தேவைகளாக மாறிவிட்டன.

**2. தொடர்புக்கருவிகளின் பயன்பாடு**

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் ஊடகங்களின் புதிய கருவிகள் அறிமுகமாகாத நிலை. அன்றே நவீன கருவிகளை ஆயர் லாறன்ஸ் நற்செய்திப் பணிக்காக பயன்படுத்தியிருந்தார் என்பது நம்மை வியக்க வைக்கிறது. அன்று நம்மிடையே மிக மிக அரிதாக பயன்படுத்தப்பட்ட புகைப்பட கருவி, நகல் பதிவு இயந்திரம், தொலைபேசி, கணினி, தொலைநகல் இயந்திரம் ஆகியவற்றை அவர் பயன்படுத்தி சாதாரண மக்களுக்கு நல்வாழ்வு, நம்பிக்கை வாழ்வு, வளர்ச்சி பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இவற்றை வைத்துக்கொண்டு வெவ்வேறு துறைகளிலுள்ள வல்லுநர்களை தொடர்பு கொண்டு தன் அறிவையும் புதுப்பித்துக் கொண்டார்.

ஆயர் அவர்கள் KHAEP (Kanyakumari Health and Adult Education Programme) என்ற சமூக சேவை சங்கத்தை 1980 முதல் நடத்திவந்தார். நாகர்கோவிலில் இன்று அமைந்திருக்கும் கிறிஸ்துவிளாகம் ஆலய வளாகத்தை தலைமை இடமாகக் கொண்டு பல கிராமங்களில் இதன் வழியாக முதியோர் கல்வி மற்றும் சுகாதாரப் பணிகளை செயல்படுத்தி வந்தார். மிக எளிமையான குடிசை போன்ற தோற்றமுடைய ஒரு பழமையான கட்டிடத்தில் செயல்பட்டுவந்த இதன் அலுவலகத்தில் ஆயரின் தொலைநோக்குப் பார்வையால் தொலைபேசி (land line) வசதி அன்றே ஏற்படுத்தப்பட்டது.

**3. நற்செய்திப்பணிகளில் தொடர்புக்கருவிகள்**

ஊடகங்களை தனது இறைப் பணிக்காக பயன்படுத்துவதில் அன்றே ஒரு முன்னோடியாக அவர் விளங்கினார். மட்டுமல்ல ஒரு குருவாக இருந்த போதே இவர் ஒரு சிறந்த புகைப்பட வல்லுநராகவும் விளங்கினார். ஊடகங்களை பயன்படுத்துவதில் ஆயருக்கு இருந்த ஆர்வம் நற்செய்திப் பணிக்கு பெரிதும் உதவியாயிருந்தது.

சமூகத் தொடர்பு சாதனங்கள் இன்று ஒரு மாபெரும் சவாலாக உள்ளன. அதே வேளையில் ஒரு அரிய வாய்ப்பாகவும் உள்ளது இன்று நாம் பயன்படுத்துகின்ற கைபேசி, இணையதளம், சமூக வலைத்தளம், முகப்புத்தகம், வாட்ஸ்சப் இன்னும் பிற ஊடகங்களை தீயவை என்று கண்டித்து ஒதுக்குவதல்ல; மாறாக அவற்றை நம் நற்செய்திப் பணிக்காக பயன்படுத்துவதை ஊக்குவித்தார் நம் ஆயர்.

www.malankaralibrary.com

மறைமாவட்ட மற்றும் பங்கு சார்ந்த மக்களின் பல்வேறு புள்ளி விவரங்களை கணினியில் பதிவு செய்து அவற்றை உடனுக்குடன் இன்றைய நிலைக்கு ஏற்ப சரி செய்வதால் எவ்வளவு அதிகமான நன்மை பயக்கும் என நாம் அறிவோம். 1970 - களிலேயே ஆயர் தம் பணிகளை சிறப்பாகச் செய்யும் நோக்குடன் சுற்றோட்டக்கருவி, தட்டச்சு, ஒலிவாங்கி, திரைப்படக் கருவி, வானொலி, தொலைக்காட்சி போன்ற தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்தி வந்தது சமூகத் தொடர்புப் பற்றி அவர் கொண்டிருந்த தெளிவை சுட்டிக் காட்டுகிறது.

அன்றாட வழிபாட்டு செபங்களையும், புனிதர் வாழ்க்கை வரலாறுகளையும், நலவாழ்வு மற்றும் சமூக விழுமியங்களுக்கான செய்திகளையும் துண்டு பிரசுரங்கள், சிறு புத்தகங்கள் வழியாக தொடர்ச்சியாக மக்களுக்கு வழங்கிக் கொண்டேயிருந்தார். சாதாரண மக்களின் அறிவு மற்றும் வாழ்க்கை நிலைக்கு ஏற்ப எளிய முறையில் அனைவரும் கற்றுக் கொள்ளும் வகையில் இவை அமைந்தன.

**4. முடிவுரை** ஆகவே சமூக தொடர்பு முறைகளை கடவுள் கொடுத்த கொடையாகவே ஆயர் தொடக்க முதல் நம்பியிருந்தார். இவற்றால் நம் வாழ்வில் இயேசுவின் விழுமியங்களையும், நற்செய்திக்கு தகுந்த புது மனப்பாங்கையும் ஊக்குவிக்க முடியும். ஊடகங்களை பழிப்பதை தவிர்த்து ஆக்கப்பூர்வமாக நேர்நிலையோடு அன்றே ஆயர் பயன்படுத்தியது இன்று ஊடகங்கள் பயன்பாடு பற்றிய தெளிவை நாம் பெற உதவியாக உள்ளது.

## 5.எளிய வாழ்வு

ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் எவ்வாறு எளிய வாழ்வு வாழ்ந்தார்?

**1.முன்னுரை**

ஏழ்மையான குடும்பத்திலிருந்து நான் வந்தவன் என்ற உணர்வு அவரிடம் இறுதிவரை இருந்தது. வாய்ப்புகளும் வசதிகளும் ஏற்படும் போது, பிறரை கவர்வதற்காகவும், பிறர் பாராட்டைப் பெறுவதற்காகவும் தனது முந்தைய ஏழ்மை நிலையை அறிக்கையிட்டு ஆனால் தற்பொழுது ஆடம்பர வாழ்க்கை வாழ்பவராக அவர் இருக்கவில்லை. ஏழ்மை என்பது ஆசைப்படுபவை கிடைக்காத காரணத்தால் ஏற்றுக் கொள்ளும் ஒன்றல்ல: மாறாக அனைத்தும் கிடைத்தும் அதை வேண்டாமென்று வைப்பதே ஏழ்மை என ஆயர் வாழ்ந்து காட்டினார். வயது முதிர்ந்த காலத்திலும், நோய்வாய்பட்டு அறுவை சிகிட்சைக்கு உட்பட்ட காலத்திலும் கூட தன் அடிப்படை தேவைக்கு தன் அறையோடு இணைந்த தனி ஒரு கழிவறை வசதிக்கூட அவர் செய்து கொள்ளவில்லை.

**2. தாயின் மரண நிகழ்வுகள்**

ஆயர் லாறன்சின் தாய் மற்றும் சகோதரன் திருவனந்தபுரத்தில் ஒரு குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தனர். 23-03-1993 அன்று ஆயரின் தாய் மரணமடைந்தார். செய்தி அறிந்து ஆயர் ஓடோடிச் சென்று அச்சிறு இல்லத்தில் அமைதியாக துயில் கொண்டிருந்த தன் அன்புத்தாயின் சடலத்தில் தன் முகத்தை மறைத்துக் கொண்டு நெஞ்சோடு அணைத்து சில நிமிடங்கள் மௌனக்கண்ணீர் வடித்தார். பின்னர் உடல் பட்டம் பேராலயத்தில் வைக்கப்பட்டு பேராயர் மற்றும் குருக்களால் திருப்பலியும் திருச்சடங்குகளும் நடத்தப்பட்டன. பேராலயத்திற்குச் சொந்தமான சிற்றாலயத்துடன் சேர்ந்து அமைக்கப்பட்டிருந்த கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். தொடர்ந்து 40-ம் நாள் நினைவுத் திருப்பலியும் கல்லறை அர்ச்சிப்பும் வந்தது. ஆயரின் தாயின் நினைவு என்ற முறையில் விமரிசையாகவே இந்நிகழ்வை நடத்த ஏற்பாடு செய்ய பலர் ஆசைப்பட்டனர். ஆனால் அதை அறிந்த ஆயர் லாறன்ஸ் மிக தெளிவான குரலில் "எனது அம்மா வாழ்ந்த நாட்களில் மிக எளிய வாழ்வையே வாழ்ந்தார்கள். இறந்த பின் அவர் நினைவையும் மிக எளிய முறையிலேயே நடத்தினால் போதும். ஆடம்பரச் செலவுகள் வேண்டவே வேண்டாம். அதுதான் என் அம்மாவுக்கும் எனக்கும் மகிழ்ச்சி" என்றார். அவர் விருப்பப்படி சடங்குகள்

www.malankaralibrary.com

எளிய முறையிலேயே நடந்தேறின. இவ்வாறு அவர் தன் வாழ்வில் அனைத்து சூழ்நிலைகளிலும் ஏழ்மையைக் கடைபிடித்தவர்.

**3. தனது எளிய வாழ்வு**

"ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர்: ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே" (லூக் 6:20) என்ற இயேசுவின் போதனையும் "திருச்சபை ஏழைகளின் திருச்சபையாக இருக்க வேண்டும் என விரும்புகிறேன்: ஏனெனில் ஏழைகளிடமிருந்து நாம் கற்றும் கொள்ள வேண்டியது ஏராளம் உள்ளது" என்ற திருத்தந்தை பிரான்சிஸ்சுவின் அறிவுரையும் நம் ஆயரின் ஏழ்மையான வாழ்வோடு ஒப்பிட்டு பார்க்கத் தகுந்தது. எளிய வாழ்வை தன் வாழ்வில் வாழ்ந்து காட்டிய ஆயர் தன் பணிக்கு உட்பட்ட பிறரையும் ஏழ்மை முறையை கடைபிடிக்க தூண்டினார்.

**4. ஆலயங்களில் எளிமை**

திருவிழாவிற்கு ஆடம்பர சொகுசு வாகனத்தில் ஆயர் வருவார் என்று எதிர்பார்த்திருந்த மக்களுக்கு பல வேளைகளில் பழைய ஜீப்பில், தேவைப்பட்டால் தானே அதனை ஓட்டி வந்து வரவேற்பை ஏற்றுக் கொள்வதிலே திருப்தி அடைந்தவர் அவர்.

ஆலயங்கள், பொது கட்டிடங்கள் கட்டும் போது மிக அவசியமானவற்றை மட்டுமே செய்யத் தூண்டினார். ஆடம்பரங்களை அறவே தவிர்த்தார். நம் நாட்டில் மழை பொழிவது ஒருசில மாதங்களே. எஞ்சிய நீண்ட மாதங்கள் வெப்பமான காலநிலை. எனவே அதற்கு ஏற்றபடி திறந்த, காற்றோட்டமான, பொருத்தமான கட்டிடங்களையே கட்ட ஊக்குவித்தார்.

ஏழை மக்களின் உழைப்பை பயன்படுத்தி பல கோடிகள் செலவிட்டு கடவுளை வழிபட வழிபாட்டுத்தலங்கள் அமைப்பது கடவுளின் இயல்புக்கு முரண்பாடானது என்று அன்றே அவர் அடிக்கடி வலியுறுத்தி வந்தார்.

**5. மறைசாட்சி இலாறன்ஸ்**

ஆயர் லாறன்சின் பெயர் கொண்ட புனிதர், மறைசாட்சி லாறன்ஸ் என்ற திருத்தொண்டர். (கி.பி.258) பாப்பரசர் புனித 2-ம் சிக்ஸ்சுடன் திருத்தொண்டராக பணியாற்றியவர். லாறன்சிடம் திருத்தந்தை திருச்சபை சொத்துக்களுக்கும் செல்வங்களுக்கும் உரிய பொறுப்பை ஒப்படைத்திருந்தார். கொடுங்கோல் மன்னன் வலேரியன் காலத்தில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். திருத்தந்தை 2-ம் சிக்ஸ்சஸ் உட்பட பலர் கொடூரமாக கொல்லப்பட்டனர். அப்போது மன்னன் கிறிஸ்தவர்களிடம் இருந்த நிதியை அனைத்தும் நாட்டுக்கு பயன்படுத்த ஒப்படைக்க வேண்டும் என கட்டளை இட்டான். திருத்தொண்டர் லாறன்சின் பொறுப்பில் ஏராளமான நிதி இருக்கும் என்ற எண்ணத்தில் அவருக்கும் இக்கட்டளைக் கொடுக்கப்பட்டது. மூன்று நாட்கள் அவகாசம் கேட்ட லாறன்ஸ் அனைத்து சொத்துக்களையும் செல்வங்களையும் திரட்டி அன்று வாழ்ந்த ஏழைகளுக்கு கொடுத்துவிட்டார்.

மன்னனின் ஆணைப்படி நிதியைக் கொண்டு வர உரோமை அதிகாரி கேட்டபோது அவரால் ஒன்று கூட்டி வைத்திருந்த பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர், வாய் பேசாதோர், தொழுநோயாளர், விதவையர், அனாதைகள் என்று பல வகையான ஏழையரின் ஒரு பெருங் கூட்டத்தையே சுட்டிக்காட்டி "இவர்கள்தான் என் பொறுப்பில் உள்ள திருச்சபையின் நிதி" என்று கூறினார். கோபமுற்ற மன்னன் லாறன்சை பழுக்க காச்சிய இரும்புக் கட்டிலில் படுக்க வைத்து பொரித்து கொன்றான். ஆயர் லாறன்சுக்கு அவர் தந்தை எவ்வளவு பொருத்தமான பெயர் சூட்டியிருக்கிறார் என்பது நம்மை வியக்க வைக்கிறது. ஏனெனில் அதே மறைசாட்சியின் ஏழைகள் பால் கொண்டிருந்த பரிவு, இரக்கம், அக்கறை, ஆர்வம் நம் ஆயரின் வாழ்வு முழுதும் நிறைத்திருந்தது.

**6. முடிவுரை**

இவ்வாறு ஆயர் உயர்ந்து சிந்தித்தார். திறம்பட செயல்பட்டார். பெரிய உள்ளத்துடன் பணி புரிந்தார். ஆனால் தன் வாழ்வின் இறுதிவரை ஏழ்மையை வாழ்ந்து காட்டினார்.

## 6. நற்செய்திப்பணி

www.malankaralibrary.com

ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேமின் நற்செய்திப்பணி எவ்வாறு அமைந்திருந்தது?

**1. பெருவிளை**

2012-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2-ம் நாள் மண்ணின் மறைசாட்சி தேவசகாயம் பிள்ளை அருளாளர் என திருச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்டு பீட வணக்கத்திற்கு தகுதி பெற்றார். நாயர் குலத்தில் தோன்றி கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்றுக்கொண்ட அவர் துன்புறுத்தப்பட்ட இடங்கள் நம் குமரி மண்ணில் இன்று பொலிவுடன் திகழ்கின்றன. அத்தகைய ஒரு புனித இடம் தான் நாகர்கோவில் உள்ள பார்வதிபுரம் சமீபம் அமைந்துள்ள பெருவிளை. இங்கு தான் அவர் கட்டி வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட வேப்ப மரம் நின்றது. அவரை துன்புறுத்த மன்னரால் நியமிக்கப்பட்ட ஆராச்சர் குடும்பத்தின் வாரிசான திரு. ஜனார்த்தனன் 'பிள்ளை அங்கு குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்.

இறை நம்பிக்கைக்காக சித்திரவதை செய்யப்பட்டு வீர மரணமடைந்த பொது நிலையினரான தேவசகாயம் பிள்ளளையின் துணிவு ஆயர் மார் எப்ரேமின் மனதைத் தொட்டது. பிற்காலத்தில் அவர் நிச்சயம் திருச்சபையின் பீட வணக்கத்திற்கு உயர்த்தப்படுவார் என ஆயர் நம்பினார். எனவே மிகுந்த சிரமப்பட்டு பல நபர்களின் ஒத்துழைப்போடு அவ்வேப்ப மரம் நின்ற இடத்தை விலைக்கு வாங்கினார். அவ்விடத்தில் ஒரு கற்சிலுவையும் கல்லறையும் இருந்தன. இருப்பினும் அவ்விடத்திற்குள் நுழைய முடியவில்லை. ஆராச்சார் குடும்பத்தினரின் எதிர்ப்பே அதற்கு காரணம். சில வாரங்களுக்குப்பின் ஆயர் லாறன்சும் அன்றைய பார்வதிபுரம் பங்குத்தந்தையும் இணைந்து அதன் உள்ளே நுழைய முயன்றனர். ஆனால் ஆராச்சாரும் அவர் குடும்பமும் வன்மையாக எதிர்த்து சத்தம் போட்டனர். வந்தவர்கள் அதே வாகனத்தில் ஏறி திரும்பிவிட்டனர்.

இருப்பினும் ஆயர் தொடர்ந்து முயன்றார். அவரது வழிகாட்டுதலின் படி சில வாரங்களுக்குப்பின் பங்குத்தந்தை மீண்டும் சென்ற தகவல் அறிந்தார். அங்கு நின்ற வேப்பு மரமும் உலர வைக்கப்பட்டிருந்தது. கற்சிலுவை உடைத்து அகற்றப்பட்டிருந்தது. அருகிலுள்ள சமூக விரோதிகள் சிலர் இரவோடு இரவாக ஆராச்சருக்குக்கூட தெரியாது இவ்வாறு செய்தது பின்னர் தெரியவந்தது. ஏனென்றால் ஆராச்சர் குடும்பத்தார் அவ்விடம் விட்டு அகற்றப்படாமல் இருக்க, சில நபர்களிடம், கிறிஸ்தவர்கள் இவ்விடத்தில் ஆலயம் எழுப்பப் போகிறார்கள் என்று புகார் கூறி இருந்தார். கடவுள் ஒவ்வொன்றிற்கும் ஒரு காலம் வைத்துள்ளார். ஏனெனில் ஆயர் நம்பியதுபோல நற்செய்திப்பணி கடவுளின் பணி. அது கடவுளின் கொடை. கடவுளை நம்பி செபித்து, பலர் வழியாக முயன்ற ஆயருக்கு அவ்விடம் சொந்தமானது. பல நிலைகளைக் கடந்து இன்று அவ்விடம் அருளாளர் தேவசகாயம் பிள்ளையின் திருவுருவமும் சிற்றாலயமும் அமைக்கப்பட்டு ஒரு திருத்தலமாக விளங்குகிறது. என்னே இந்த ஆயரின் நம்பிக்கை! என்னே அவரது நற்செய்திப் பணி ஆர்வம்!

**2. நற்செய்திப்பணியில் உரைகள்**

நற்செய்திப் பணி இறைவனின் பணி. மனித முயற்சிக்கு கடவுள் தான் பலனளிக்க வேண்டும். எனவே தோல்விகளையும் பின்னடைவுகளையும் கண்டு துவண்டு விடக்கூடாது என்பது ஆயர் மார் எப்ரேமின் அசைக்க முடியாத நம்பிக்கை. அவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு நற்செய்தி பணித் தளங்களின் வரலாறும் இதற்கு சான்று. பட்டம் தூய மரியன்னை பள்ளிக்கூட அரங்கில் வைத்து நடந்த ஒரு நிகழ்வு. பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஏழை எளிய மக்களின் வளர்ச்சி பற்றி பேருரை ஆற்றினார். தனது உரையை முழுமையாக திருச்சபையின் படிப்பினைகளையும், திருத்தந்தையரின் அறிவுரை மடல்களையும் மையமாக வைத்து ஆற்றினார். "நீதி சிறந்த மதிப்பீடுதான். ஆனால் அன்பு நீதியை விட சிறந்த மதிப்பீடு. அமைதியின் மறுபெயர் வளர்ச்சி. எங்கு வளர்ச்சி இல்லையோ அங்கு அமைதி இருக்க முடியாது. நீதியையும் வளர்ச்சியையும் கடந்து மனிதன் தோழமையில் வாழவேண்டும். தோழமையில் வாழ்வது என்பது இல்லாதவன் மிகுதியாக இருப்பவனிடமிருந்து எடுத்துக் கொண்டால் கூட அது தவறில்லை " என ஆணித்தரமாக எடுத்துக் கூறினார். தல மக்களிடையே காணப்பட்ட ஏற்ற தாழ்வுகளை களைய புரட்சிகரமான கருத்துக்களை

எவ்வித தயக்கமுமின்றி யார் முன்னிலையிலும் அவரால் கூற முடிந்தது. ஏனெனில் அவரது போதனைகள் திருச்சபையின் படிப்பினைகளில் ஊன்றியிருந்தன.

**3. நற்செய்திப்பணியாற்றிய முறை**

பவுலடியாரைப்போன்று நற்செய்தியை அறிவிப்பதே வாழ்வின் பணி இலக்காக (vision) ஆயர் கொண்டிருந்தார். புதுப்புதுத் தளங்களைக் கண்டுபிடித்து அங்கு வாழும் மக்களுக்கு நற்செய்திப் பணியாற்ற அல்லும் பகலும் ஓய்வின்றி உழைத்தார். தமது உயிர் மூச்சாகக் கொண்டிருந்த நற்செய்திப் பணியை நனவாக்கும் அவர் சாட்சிய வாழ்வு வாழ்ந்தார். இதுவே அவரது செயல் திட்டமாக (mission) இருந்தது. வாழ்க்கை சான்று வழியாக அவர் நற்செய்திப் பணி ஆற்றிய முறை மலங்கரை சபைக்கு இன்றும் ஒரு மாதிரியாகவும் சவாலாகவும் விளங்குகின்றது என்றால் அது மிகை ஆகாது.

**4. தன் வாழ்வே நற்செய்திப்பணி வாழ்வு**

ஆயர் மேற்கொண்ட அத்தனை முயற்சிகளும் நற்செய்திப் பணி என்ற ஒன்றையே இலட்சியமாகக் கொள்ளப்பட்டன. அவர் இறுதி மூச்சுவரை சிறந்த ஒரு நற்செய்திப் பணியாளராகவே வாழ்ந்தார். நோயின் ஆதிக்கத்தால் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த நாட்கள். மருத்துவர்கள் எவரையும் சந்திக்கவோ பேசவோ கூடாது என கண்டிப்பாக்க கூறியிருந்தனர்.

இக்கட்டளையை அப்படியே நிறைவேற்ற கண்ணும் கருத்துமாக காவல் நின்றார் அருட்சகோதரி ஒருவர். எப்படியோ அருட்தந்தை ஒருவர் அறையின் உள்ளே நுழைந்துவிட்டார். ஆயர் அவரிடம் பேசத்தொடங்கினார். புதுப்புது நற்செய்தி அறிவிப்பு மையங்கள் ஏற்படுத்துவது... நலவாழ்வு, கல்வி, வேலைவாய்ப்பு, மறைக்கல்வி - இவ்வாறு பல துறைகளைப் பற்றி மெல்லியக் குரலில் பேசிக் கொண்டிருந்தார். அச்சமயம் உள்ளே நுழைந்த அருட் சகோதரி அந்த அருட் தந்தையையும் ஆயரையும் அன்புடன் "மருத்துவர்கள் முழு ஓய்வு எடுக்க வேண்டுமென்று கூறியிருப்பது தெரியாதா" என்று கடிந்து கொண்டார். ஆனால் ஆயரோ பதிலாகச் சொன்னார், "சிஸ்டர், ஓய்வு என்பது எந்த பணியையும் செய்யாமலிருப்பது அல்ல ; ஆர்வமுள்ள பணியை செய்வதுதான் ஓய்வு'. இவ்வாறு ஆயரின் வாழ்வே ஒரு சிறந்த நற்செய்திப் பணியாக அமைந்தது எனலாம்.

**5. ஆயர்ப்பணி**

ஆயர் தாம் பெற்றிருந்த குருத்துவம் பணிக்குருத்துவம் என்பதை உணர்ந்திருந்தார். நம்பிக்கை கொண்டோர் அனைவரும் பெற்றிருக்கும் பொதுக்குருத்துவத்திலிருந்து, தம் பணி வேறுபட்டது என அவருக்கு நன்கு தெரியும். பணிக்குருத்துவம் பிறருக்காக பணி செய்ய இறைவன் கொடுத்த கொடை என்றும் அதுவே ஒரு அழைப்பு என்றும் அவர் தெளிவு பெற்றிருந்தார். மார்த்தாண்டம் மாவட்டத்தை உருவாக்கி அதன் முதல் ஆயராக திருத்தந்தை இரண்டாம் ஜாண்பால் அவரை நியமித்த போது தாம் ஆயர் என்ற உணர்வு இன்னும் அவரிடம் மேலிட்டு நின்றது.

நோயின் ஆதிக்கத்தால் மருத்துவமனையில் தீவிர சிகிட்சை பெற்றுவந்த அந்த நாட்களிலும் அவரது எண்ணமெல்லாம் ஆயர் என்ற முறையில் தன் கடமைகளை நிறைவேற்றுவதிலே இருந்தது. எனவே தன் உடல்நிலையையும் பாராது மறைமாவட்ட பணிகள் எவ்வகையிலும் பாதிக்கக் கூடாது என்பதற்காக மருத்துவமனையின் படுக்கையிலே படுத்துக் கொண்டு மறைமாவட்ட குருக்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார். கண்ணீரோடு அவர் கரம் முத்தி ஆணையை பெற்றுக்கொண்ட குருக்களுக்கு சற்றும் தாமதமின்றி பங்கு மக்களை சந்தித்து, புள்ளி விவரங்களை எடுத்து தேவையான முயற்சிகளை அனைத்து துறைகளிலும் எடுக்கச் சொன்னார். நலம் பெற்று தாம் ஆயர் இல்லத்திற்கு திரும்பி வரும் வரைக் காத்திருந்து மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்த விரும்பாத அவரது நற்செய்திப் பணி ஆர்வத்தை என்னென்று பாராட்டுவது?

## 7. வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பு

ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் வேற்றுமையில் ஒற்றுமை கண்ட பண்பு பற்றி விவரி?

www.malankaralibrary.com

**1. முன்னுரை**

இயேசுவை எந்த ஒரு மதத்திற்கும் முழுமையாக உள்ளடக்கி வைத்துவிட முடியாது. அவர் மதங்களைக் கடந்து மனித குலம் முழுவதற்கும் உரியவர் என ஆயர் நம்பினார். இயேசுவை குறிப்பிட்ட மதங்களுக்குள் ஒதுக்கி வைத்து, எல்லோரும் உரிமை பாராட்டவிடாது தடுப்பது இயேசுவுக்கு எதிராகவும் சமூகத்திற்கு எதிராகவும் இழைக்கப்படுகின்ற பெரிய குற்றம் என்று ஆயர் உணர்ந்திருந்தார். எனவே தான் மதங்களைக் கடந்து மனித நேயத்தை மதித்து அனைவருடனும் உறவு பாராட்டினார். இந்துக்கள் என்றோ, இஸ்லாமியர் என்றோ, கிறிஸ்தவர் என்றோ அவர் பாகுபாடு காட்டவில்லை .

**2. பிறமதத்தினரோடு உறவு**

இயேசுவின் சீடனாக வாழ்ந்த ஆயர் லாறன்ஸ், தாம் கொண்டிருந்த இறை உறவின் வெளிப்பாடாக அனைத்து மதத்தினரையும் மதித்து அன்பு செய்தார். படைப்பின் கடவுள் விரும்புவதும் இதுவே. எனவே தான் "உம் விருப்பம் என் ஆனந்தம் என்ற விருதுவாக்கை அவர் தேர்ந்து கொண்டார். சமயங்களுக்கும் ஆன்மீகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அவர் நன்கு உணர்ந்திருந்தார். தாம் ஒரு குறிப்பிட்ட சமயத்தை சார்ந்தும் சட்டதிட்டங்களை கடைபிடித்தும் வந்தார். இருப்பினும் அவற்றைக் கடந்து இந்து, இஸ்லாமிய மதத்தினரை மதிக்கவும் அன்பு செய்யவும் செய்தார். உலகையே ஒரு கூட்டுக் குடும்பமாக பார்த்த அவர் அது வளமுடன் வாழ வேண்டும் என்றும் ஆசைப்பட்டார்.

**3. பிறமத நல்வழி இயக்கங்கள்**

தன்னை "ஒரு சமூக ஆர்வலர்" என்று அறிமுகம் செய்தவரிடம் "மற்று அனைத்து பெயர்களையும்விட நான் ஒரு கத்தோலிக்க குரு என்று அழைக்கப்படுவதிலே பெருமைப்படுகிறேன்" என்று அறிவித்தார். இருப்பினும் அனைத்து மக்களும் இணைந்து ஒரு ஆன்மீக இயக்கத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்று முயற்சித்தார். இம்முயற்சியில் தனி நபர்களின் திறமைகள் முக்கியமானவை என நம்பினார். சமயங்கள் ஒருவரை குறுகிய வட்டத்திற்குள்ளேயே செயல்பட தூண்டும் போது ஆன்மீக இயக்கம் பரந்து விரிந்த கண்ணோட்டத்தை கொண்டதாக இருக்கிறது. அன்பு, அமைதி, உறவு, பகிர்வு, மன்னிப்பு, நீதி, நேர்மை போன்ற ஆன்மீக விழுமியங்கள் இங்கு வாழ்ந்து காட்டப்படுகின்றன. மாற்றத்தை ஏற்காத பழமைவாத செயல்பாடுகளைக் கடந்து புதுப்புது முயற்சிகள் மேற்கொண்டு தன் அழைப்பை இன்னும் அர்த்தமுள்ளதாகவும் ஆழமிக்கதாகவும் ஆயர் மாற்றிக் கொண்டார். உண்மையான இயற்கைச் சூழலில் உயிருள்ள குடிலை அமைத்ததும், கடலையும் கரையையும் பயன்படுத்தி உயிர்த்த கிறிஸ்து சீடருக்குத் தோன்றி உணவருந்திய நிகழ்வை மறுபடியும் நிகழ்த்தியதும் அனைத்தும் அவரது படைப்பாற்றலை பறைசாற்றுகின்றன. பிறரைக் கண்டு கொண்டு பிறர் இன்ப துன்பத்தில் பங்கு பெற்று வாழ்ந்த ஆயர் அகமகிழ்வையும், அமைதியையும், விடுதலையையும், நிறைவையும் அனுபவித்தார். நாகர்கோவிலை மையமாகக் கொண்டு “குமரி கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கத்துடனும்”, மார்த்தாண்டத்தை மையமாகக் கொண்ட „ஐக்கிய கிறிஸ்தவ" அமைப்புடனும், “ஐயாவழி இயக்கத்துடனும்” மற்றும் பல சமய அமைப்புகளுடனும் ஆயர் கொண்டிருந்த ஈடுபாடும் நல்லுறவும் குமரி மாவட்ட மக்களுக்கு நன்மையாக அமைந்தது.

**4. பல்சமய உரையாடல்கள்**

கத்தோலிக்கத் திருச்சபையில் அறுபதுகளில் வத்திக்கான் பொதுச் சங்கம் மரபு வழி சிந்தனையிலிருந்து மாறுபட்ட படிப்பினையைக் கொடுத்தது. 'கொள்கைகள் நம்மை பிரிக்கின்றன; பணியோ நம்மை ஒன்றினைக்கின்றது என்ற புரட்சிகரமான அறைகூவலோடு ஆரம்பிக்கப்பட்ட திருச்சங்கம் அனைத்து சமயங்களிலும் இருக்கும் உண்மை நன்மைகளையும் ஏற்றுக் கொண்டது. இப்படிப்பினையின் பின்னணியில் இந்திய கத்தோலிக்க இறையியல் சிந்தனைகளோடு நெருக்கமான தொடர்பு வைத்திருந்த நம் ஆயர் இந்திய ஆன்மீகம் 'பன்முக ஆன்மீகம்' (pluralistic spirtuality) என அறிந்திருந்தார். பல்வேறு மதநம்பிக்கைகளையும், மற்று சமய நம்பிக்கையாளர்களையும் ஆயர் மதித்து, அங்கீகரித்து

www.malankaralibrary.com

அன்பு செய்தார். பல்சமய உரையாடல்களை ஊக்குவித்து தாமும் இயன்றவரை அவற்றில் பங்கு பெற்றார். கன்னியாகுமரியில் அமைந்திருந்த தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் செல்வமணி தலைமையிலான மதநல்லிணக்க மையம், இயேசு சபை குருக்களால் நடத்தப்படும் தோழமை இல்லம், கார்மல் சபைக் குருக்களால் நடத்தப்படும் சாந்தோம் உரையாடல் மையம் ஆகியவற்றின் பல்வேறு நிகழ்வுகளில் நம் ஆயர் பங்கு பெற்றது உரையாற்றி ஊக்குவித்தது அவர் அனைவருடனும் தோழமை உறவை வளர்த்ததற்கு சான்று.

## 8.நலவாழ்வுப் பணி

ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேமின் நலவாழ்வுப் பணிகளின் தன்மைகள் பற்றி விவரி?

**முன்னுரை**

நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என வேண்டிய தொழுநோயாளரைப் பார்த்து "நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!" எனக்கூறி இயேசு குணமாக்கிய நிகழ்வை நாம் பார்க்கிறோம் (மாற் 1:40-45). குணமாக்குதல் இயேசுவின் பணிகளில் முக்கியமான பணியாக இருந்தது. பலவகை நோயாளர்களை இயேசு குணமாக்கியதை நற்செய்தி நமக்கு சுட்டிக்காட்டுகிறது (மத். 15:24-31; மாற். 6:56) நற்செய்திப் பணியைத் தம் தலையான கடமையாகக் கொண்ட ஆயர் லாறன்ஸ். நலவாழ்வுப் பணியை நற்செய்திப் பணியிலிருந்து பிரிக்க முடியாத ஒரு பணியாகக் கொண்டார். மிக்க ஆர்வத்துடன் பணியாற்றிய இத்துறையில் ஆயர் தம் தனி முத்திரையைப் பதிய வைத்தார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அவர் நீண்ட கால அனுபவத்தின் விளைவாக அவரால் தோற்றுவிக்கப்பட்டு வளர்த்தப்பட்ட ஹெல்த் பார் ஒண் மில்லியன் (HOM) இதற்கு சான்று பகர்கிறது.

**HOM ன் துவக்கம்**

உலக சுகாதார நிறுவனம் (WHO) நலவாழ்வை, "நோய் நொடிகள் இல்லாத ஒரு நிலை மட்டுமல்ல, மாறாக ஒருவன் முழுமையான உடல், மன, சமூக நலன் அடையும் நிலையே" என்று குறிப்பிடுகிறது. நம் ஆயர் இத்துடன் ஆன்மீகத்திற்கும் இடம் கொடுத்து ஒருவன் உடல், மன, ஆன்ம, சமூக நலன் முழுமையாக அடையும் நிலையில் வாழ்வதே நலவாழ்வு என கற்பித்தார். இந்நான்கு துறைகளிலும் முன்னேற்றம் காண பல்வேறு திட்டங்களை அவர் செயல்படுத்திக் காட்டினார். ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் மகளிரும் குழந்தைகளும் மேலாக கவனிக்கப்பட வேண்டியவர்கள் என அறிவுறுத்தினார். குறிப்பாக அன்றைய காலத்தில் பெண்களும் தாய்மார்களும் சமூக வாழ்வில் அவ்வளவாக ஈடுபடாது வீட்டினுள்ளே ஒதுங்கிக் கிடந்தனர். ஆயரோ மகளிரை முன்நிறுத்தி நல வாழ்வுத் திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்தினார். தனது தனித்தன்மை வாய்ந்த HOM திட்டம் முழுக்க முழுக்க மகளிரால் செயல்படுத்தப்பட்டு மகளிரின் வளர்ச்சியை மையப்படுத்தியது. இத்திட்டத்தால் மகளிர் உயிர்ப்பூட்டப்பட்டனர்.

பல்வேறு உலக அமைப்புகளின் கவனத்தை ஈர்த்த ஹோம் திட்டம் கவர்ச்சிகரமான தனி அமைப்பைக் கொண்டு கீழ்மட்ட மக்கள் முதல் மேல் மட்ட மக்கள் வரை அனைவரையும், இணைக்கும் திட்டமாக மாறியது. மாறிவரும் சமூகச் சூழலுக்கு ஏற்ப பரிணாமமடைந்து முதிர்ச்சி பெற்றதே இத்திட்டம்.

**HOM என்றால் என்ன?**

HOM மகளிரை முன் நிறுத்தி குடும்பத்தை மையமாகக் கொண்ட ஒரு திட்டம். ஒரு சமூகத்தின் தாய்மார்களும், மகளிரும் தங்களுடையவும், தங்கள் குடும்பத்தினருடையவும் ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட ஊக்குவிக்கப்படுகின்றார்கள். ஒரு தாய் பயனடையும்போது ஒரு குடும்பமே பயனடைகிறது என்று HOM நம்புகிறது. இத்திட்டத்தில் பெண்கள் பயன்பெறுபவர்களாக மட்டுமின்றி குடும்பம் மற்றும் சமூக ஆரோக்கியம், நலன்கள் ஆகியவற்றை அடையச் செய்யும் ஆக்கபூர்வமான கருவிகளாக செயல்படுகின்றனர்.

www.malankaralibrary.com

HOM அடிப்படையில் தன்னார்வ சேவையை வலியுறுத்துகிறது. இத்திட்டத்தில் செயல்படுவோர் மாதம் 2 மணி நேரம் செலவிட தயாராக இருக்க வேண்டும். இந்த இரண்டு மணி நேரத்தை :

- வாலண்டியரின் கீழ் நடக்கும் இரு வார கூட்டங்களில் பங்கு பெறவும்.
- தாய்த் தலைவியர் கற்றுக்கொடுத்தவற்றை தங்கள் குழுவில் உள்ள பிற குடும்பத்தாருக்கும் கற்றுக் கொடுப்பதற்குமாக செலவிடுகின்றனர்.

இத்தகைய கூட்டங்களில் பங்கு பெறுவதே HOM அமைப்பில் அடிப்படையாக நிறைவேற்றப்பட வேண்டிய செயலாகும். கூட்டங்களில் பங்குபெறும் தாய்மார்களின் வருகையை தாய்த் தலைவி பதிவு செய்து வாலண்டியரை ஒப்படைப்பார். 5 வாலண்டியர்களின் பொறுப்பை பெற்றிருக்கும் புரொமோட்டரை இத்தகவல் வந்தடைகிறது. எனவே புரொமோட்டர் சுமார் 5000 நபர்களின் ஆரோக்கியத்தைக் கவனிக்கிறார். 20 புரொமோட்டர்கள் சேரும்போது ஒரு சோண் ஆகிறது. இதற்கு ஆர்கனைசர் ஒருவர் பொறுப்பேற்கிறார். 10 ஆர்கனைசர்கள் இவ்வாறு செயல்படும்போது 10 லட்சம் மக்களின் சுகாதார பராமரிப்பு நடைபெறும்.

**HOM ன் குறிக்கோள்**

அனைத்து மக்களும், குறிப்பாக நலிவுற்ற மக்கள் பயனடையும் பொருட்டு சுகாதாரம் மற்றும் வளர்ச்சி பற்றி தொடர்ச்சியாக கல்வி புகட்டி சுயமாக செயல்படக்கூடிய ஒரு அமைப்பை பரிணமிக்கச் செய்வதே ஹெல்த் ஃபார் ஒண் மில்லியனின் குறிக்கோள்.

**HOM - ஐ வழிநடத்தும் கொள்கைகள்**

- முழுமையான ஆரோக்கிய முயற்சியில், ஆரோக்கிய பராமரிப்பே நோய் குணமாக்குதலைவிட முக்கியமானது.
- முழுமையான மனிதவளர்ச்சி நிலையில் மட்டுமே ஆரோக்கியத்தை பேண முடியும்.
- வளர்ச்சி என்பது சுயமாக வளர்வது. எனவே சமூகத்தின் வளர்ச்சி என்பது, சமூகம் தன்னிலே சுயமாக வளர்வது. ஆகவே சுய உதவி மற்றும் நிரந்தர சுயவளர்ச்சி திட்டங்கள் மிக முக்கியமானவை.
- வெளியில் இருந்து, கிடைக்கும் உதவி எந்த அளவுக்கு தலமக்களை ஒன்று கூட்டவும், அவர்களது முயற்சியை ஒருங்கிணைக்கவும், அவர்களது தலைமைத்துவத்தை ஊக்கப்படுத்துவதற்கும் உதவுகிறது, உதவியாளர்களின் பணி மக்களுக்காக பணிபுரிவதை விட மக்களுடன் பணிபுரிவதே ஆகும்.
- சமூகத்தில் பங்கு பெறுதலைவிட, சமூக தீர்மானமே மிக அதிக பொருள் உள்ளதாகும்.
- நலத்திட்டங்களை செயல்படுத்தும்போது, தல வளங்களை அதாவது, நபர்கள், நிதி நிறுவன வசதிகள், சமூக அமைப்புக்கள் ஆகியவற்றை ஜாதி மத வேறுபாடின்றி பயன்படுத்தப்பட வேண்டும்.
- நலத்திட்டங்கள் செயல்படுத்தும்போது பொருத்தமான தொழில் நுட்பத்தை பயன்படுத்த வேண்டும்.
- சுகாதாரம், வளர்ச்சி ஆகியவை பற்றி கல்வி புகட்டும் போது முறைசார்ந்த மற்றும் முறைசாரா வழிகளை கையாள வேண்டும்.

**HOM விதி**

"பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்' (லூக் 6:31) என்ற பொன் விதியே HOM செயல்பாடுகளில் கடைபிடிக்கப்படுகிறது. HOM மக்களிடையே சுமுகமான அன்புறவை வளர்த்து பகிர்வு மனநிலையை குடும்பங்களில் வளரச்செய்கிறது.

**HOM ன் செயல்களும் நலத்திட்டங்களும்**

யூனிசெஃப் (UNICEF) -ன் தாய்-சேய் நலத்திட்டத்தில் ஊக்குவிக்கப்பட்ட ஏழு காரியங்களுடன் HOM மூன்றைக்கூட சேர்த்து 10 அம்ச திட்டமாக செயல்படுத்துகிறது. அவை (GOBIFFFRED) என அறியப்படும் பின்வருவன:

www.malankaralibrary.com

1. G - 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் எடை கணக்கிடுதல்
2. 0 - தண்ணீர் சிகிட்சை
3. B - தாய்ப்பால் ஊட்டுதல்
4. I - தடுப்பூசி போடுதல்
5. F - மகளிர் கல்வி
6. F - சத்துணவு
7. F - குடும்பக்கட்டுப்பாடு (இயற்கை முறை)
8. R - ஊனமுற்றோர் மறுவாழ்வு
9. E - சுற்றுப்புறச் சூழல் பராமரிப்பு
10. D - வருமானப் பெருக்க திட்டங்கள் வழியாக பொருளாதார வளர்ச்சியைப் பெருக்குதல்.

இவ்வாறு HOM :

- குழந்தைகள் (5 வயதிற்குட்பட்டவர்கள்) (Children under Five)
- பாலூட்டும் தாய்மார்கள் (Lactating Mothers)
- கர்ப்பிணித் தாய்மார்கள் (Pregnant Women)
- தாய்மை நிலையை அடையும் வயதுற்குட்பட்ட மகளிர் (Women of child Bearing Age - WCBA)
- வளர் இளம் பருவ மகளிர் (Teen Age Girls)

ஆகியோரின் நலனில் அதிக அக்கரைகாட்டி வருகிறது. மேலும் HOM பல நலத்திட்டங்களையும் நிவாரண பணிகளையும் பல்வேறு அமைப்புகளின் உதவியுடன் தேவைக்கேற்ப செயல்படுத்தி வருகிறது.

ஆயரின் அறிவுரைப்படி 1989 முதல் 1995 வரையிலான ஆண்டுகளில் மார்த்தாண்டம் பேராலயத்தில் பெற்றோர்கள் குழந்தைகளை திருமுழுக்கு பெற கொண்டு வரும்போது குழந்தைகளின் பிறப்பு எடையைக் கூட குறித்து வர வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. யாராவது தவறினால் அருகில் நின்றிருந்த மாமரக் கொப்பில் தொங்கவிடப்பட்டிருந்த எடை நோக்கியை பயன்படுத்தி எடை எடுக்க பணிக்கப்பட்டனர். பிறக்கும் குழந்தைக்கு 3 கிலோ எடை இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இதன் நோக்கம். ஆண்டுதோறும் கவனிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் இவ்விழிப்புணர்வை எவ்வளவு அதிகமாக பெற இம்முறை உதவியது என்று உறுதிப்படுத்தியது. இவ்வாறு ஆயர் லாறன்ஸ் ஆலயத்தையும் வழிபாட்டையும் ஆலய வளாகத்தையும் ஆலயம் சார்ந்த செயல்பாடுகளையும் கூட மக்களின் நல்வாழ்வுக்கு சாதகமாக மாற்றிக்கொண்டார்.

**முடிவுரை**

இதை இந்திய சுகாதார தன்னார்வ தொண்டமைப்பின் கீழ் வெளியிடப்பட்ட அனுபவ் (ANUBHAV) -ல் 1991 மாத இதழ் இவ்வாறு எழுதியது: "ஒரு தலத்திருச்சபை தான் பணி செய்யும் சமூகத்திற்கு தனது தல வளங்களையும் அமைப்புகளையும் வளர்ச்சி கொள்கைகளையும் பயன்படுத்தி அரசு வளங்களையும் மற்றும் அனைத்து நிதி நிறுவனங்களையும் அருகில் எட்டச்செய்து சமூகத்திற்கு உயிர்ப்பூட்டும் பணி செய்ய முடியும் என்பதற்கு ஹெல்த் பார் ஒன் மில்லியன் ஒரு எடுத்துக்காட்டு". பலரது பாராட்டுதலுக்கும் ஆய்வுக்கும் கல்விக்கும் தளமாக அமைந்த HOM நம் ஆயரது சமூக ஈடுபாட்டிற்கு சிறந்த சான்று எனலாம்.

## 9. துறவறம்

ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேமின் துறவறம் பற்றியக் கருத்துக்கள் யாவை?

**1. முன்னுரை**

சமூக வாழ்வில் மகளிரை ஈடுபட செய்து பெரும் மாற்றத்தை கண்டவர் ஆயர் லாறன்ஸ். மகளிர் சுயமாக சிந்தித்து வளரவும் குழுக்களாக இணைந்து செயல்படவும் தலைமைத்துவ பண்புகளை வளர்த்து அவர்களை ஆற்றல் மிக்கவர்களாகவும் மாற்றியது அவரது திட்டங்கள். மகளிர் மாற்றத்தின் தூதுவர்களாக உருமாற்றம் அடைந்து பல்வேறு

www.malankaralibrary.com

துறைகளில் மக்கள் வளர்ச்சி அடைய தேவையான பயிற்சியும் ஊக்கமும் அளித்தார். இதன் விளைவுகளை குடும்பத்திலும் சமூகத்திலும் ஏற்பட்ட வளர்ச்சியைக் கண்கூடாகக் கண்டனர் மக்கள். இவ்வாறு அக்காலக்கட்டத்தில் நம் பகுதியிலுள்ள மக்களின் ஆற்றலை உணர்ந்து அதை மதித்து சமூக வளர்ச்சிக்கு பயன் படுத்த செய்த பெருமை அவரை சாரும். அவரது HOM திட்டத்தின் இன்றைய நிலையே மகளிர் சுய உதவிக் குழுக்கள் எனலாம்.

**2. மகளிரும் துறவியரும்**

சிறந்த நற்செய்தி பணியாளராக விளங்கிய ஆயர் திருச்சபையில் துறவியரின் பங்கை, குறிப்பாக பெண் துறவியரின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்திருந்தார். எனவே துறவற வாழ்வுக்கு இன்றைய இளைஞர்களையும் இளம் பெண்களையும் ஊக்குவித்தது மட்டுமன்றி துறவியரின் வாழ்வு இப்படி அமைய வேண்டும் என்ற தெளிவான கண்ணோக்கு உடையவராகவும் இருந்தார்.

**3. துறவியரின் பெரும்பணி**

துறவு என்பது மனித வாழ்க்கையில் இறைவன் கொடுக்கும் ஒரு மகத்தான அழைத்தல். துறவற ஆடை அணிந்து தெரு வழியாக நடந்து சென்றாலே கடவுளின் பிரசன்னத்தை பிறர் அறிவர் என்று அவர் அறிவுறுத்தினார். துறவறத்தாரின் தலையாயக் கடமை நற்செய்தி அறிவித்தல். இது மனித முயற்சியால் பலனளிப்பது அல்ல. மாறாக கடவுளின் கொடை. எனவே கடவுள் வகுத்துக் கொடுக்கின்ற வாய்ப்புகளை பயன்படுத்தி துறவியர் முயல்வதே அவர் தம் கடமையாகும். பெரும் ஆலயங்களை கட்டி எழுப்புவதைவிட மக்களைக் கட்டி எழுப்புவதில் துறவியரின் பங்கு பெரிது என உணர்த்தினார். குருக்களுக்கு கடந்து செல்ல முடியாத பல குடும்பங்களிலும் பெண் துறவியர் நுழைந்து சென்று மனித உறவுகளை சீர்படுத்தி புனிதப்படுத்த துறவிகளால் முடியும் என்பது அவர் நம்பிக்கை. எனவேதான் பலிபீடத்தை பூக்களாலும் துணிகளாலும் அலங்கரிக்கும் பொறுப்பை பிறருக்கு விட்டுவிட்டு, குடும்பங்களை சந்தித்து உடைந்து போன உள்ளங்களை ஆற்றித்தேற்றி ஆண்டவரிடம் திரும்பி வர மறைக்கல்வி புகட்டுவதே துறவியரின் மேலான கடமை என்று போதித்தார்.

பெண் துறவியருக்கு பரந்து விரிந்த மனநிலையுடன் அரிய பெரிய நற்செயல்களை செய்ய இன்றும் முடியும் என்று ஆயர் கற்பித்தார். ஆற்றுப்படுத்துதல், முதியோரையும் நோயாளர்களையும் அக்கரையோடு பராமரித்தல், மன நோயாளர்களை கண்டு கொள்ளுதல், மதுவுக்கு அடிமை ஆனவர்களை குணப்படுத்துதல், வயது பாராது தேவைக்கு ஏற்ப மறைக்கல்வி புகட்டுதல், நல வாழ்வை ஊக்குவித்தல் அருளடையாள வாழ்வு வாழ ஊக்குவித்தல் போன்ற தேவையான பணிகள் சபை மக்களுக்கு மட்டுமன்றி சமய பாகுபாடின்றி அனைவருக்கும் கிடைக்கப்பெற துறவியர் பெரும் அளவில் உதவ முடியும் என அறிந்து ஆயர் துறவியரை ஈடுபடுத்தி நிறைவு கண்டார்.

**4. விழுமிய வாழ்வு**

கல்வி, சுகாதாரம், சமூக சேவை போன்ற பல்வேறு துறைகளில் துறவியர் ஈடுபடுவதன் வழியாக இயேசுவின் ஆன்மீக விழுமியங்களை வாழ்ந்து காட்ட துறவியர் சிறப்பாக அழைக்கப்படுகின்றனர். நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை, கூட்டு முயற்சி, அனைவரையும் உள்ளடக்கிய ஆன்மீகம் ஆகியவற்றில் துறவிகள் வளர்ச்சி பெற அடிக்கடி துறவியரை ஒன்று கூட்டி ஆயர் பல பயிற்சிகளைக் கொடுத்தார்.

"நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னை பின்பற்றும்" (மத் 19:21) என்றார் இயேசு. இவ்வழைப்பை ஏற்று தேர்ந்து கொண்டு கூட்டு வாழ்வு வழியாக தங்களையும் புனிதமாக்கி பிறருக்கு இறையாட்சி விழுமியங்களை வாழ்ந்து காட்டுவதே துறவற வாழ்வு. பசித்தவருக்கு உணவாக, நோயாளருக்கு மருந்தாக, தவறியவருக்கு வழிகாட்டியாக, மனமுடைந்தவருக்கு நம்பிக்கையாக, துன்புறுவோருக்கு ஆறுதலாக மக்களைத் தேடிச் சென்று இயேசுவின் சாட்சிகளாக பணிபுரிய துறவியரை ஆயர் எப்போதும் உற்சாகப்படுத்தி வந்தார். மக்களை கட்டி எழுப்புவதில் துறவியரின் பங்கு

மிகப் பெரிது. இவ்வாறு இறையரசின் அடையாளமாக துறவியர் விளங்குகின்றனர். "அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்" (2 கொரி 8:9).

**5. திருச்சபையில் துறவியரின் பங்கு**

கிறிஸ்துவை அறியாத மக்களிடையே துறவிகள் குறிப்பாக அருட்சகோதரிகளே இயேசுவின் பிரசன்னமாக விளங்கினர். துறவிகளே இயேசுவின் முகமாகவும் திருச்சபையின் முகமாகவும் விளங்கினர். எனவேதான் நம் ஆயர் அருட்சகோதரிகளை புதுப்புது இடங்களுக்கு அனுப்பி, அவர்கள் வாயிலாக சிறு கிறிஸ்தவ சமூகங்களை நிறுவினார். பார்வதிபுரம் தைனேசி மாதா ஆலயம் போன்ற இடங்கள் இதற்கு சான்று பகர்கின்றன.

இன்றும் பொதுமக்களைப் பொறுத்த வரையில் நோயாளிகளுக்கும் துன்புறுவோருக்கும் துறவிகள் காட்டிவரும் இரக்கத்தையும் பராமரிப்பையும் மிக்க நன்றியுணர்வோடும் மதிப்போடும் காண்கின்றனர்.

**6. முடிவுரை**

திருச்சபையில் அருட்சகோதரிகள் வழியாக எவ்வளவோ சாதனைகளை நிகழ்த்த முடியும் என ஆயர் அறிந்திருந்தார். சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதில் கன்னியர் பெரும் பங்கை ஆற்ற முடியும் என அவர் அறிந்திருந்தார். எனவே கன்னியர்களுக்கு விழிப்புணர்வூட்டினால் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பணி எளிதாகிவிடும் என நம்பினார். எனவே கன்னியர்களுக்கும், கன்னியராக பயிற்சி பெறும் இளம் சகோதரிகளுக்கும் பயிற்சி கொடுத்து அர்த்தமுள்ள நற்செய்திப் பணியாளராக மாற்ற அவர் போதிய நேரம் கண்டு பிடித்தார். எளியமுறையில் பாடல், நகைச்சுவை வழியாக அரிய பெரிய உண்மைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறினார். இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவைப் பொதுச் செயலராக பொறுப்பேற்றிருந்த காலத்தில் பேரவை முடிந்து வருகின்ற நாட்களில் அருட்சகோதரிகளை கூட்டி அவர்களுடன் தன் அறிவைப் பகிர்ந்து கொள்வது அவருக்கு வழக்கமாயிருந்தது. "அருட்சகோதரிகள் ஏவல் பணி செய்யும் வேலையாட்களாக இருக்கக்கூடாது. மாறாக அவர்கள் பங்கு என்பது கானாவூர் திருமண வீட்டில் மரியாவின் பங்கை ஒத்தது" என சகோதரிகளுக்கு நினைவூட்டி வந்தார். திருச்சபையில் கன்னியரின் பங்கு என்ன என்று அவருக்கு இருந்த தெளிவு இதிலிருந்தே வெளிப்படுகிறதல்லவா?

## 10.கைவிடப்பட்டோர் மீது கரிசனை

ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் எவ்வாறு கைவிடப்பட்டோர் மீது கரிசனை காட்டினார் என்பது பற்றி விளக்குக?

1. **முன்னுரை:**

அவர் நம்பியவற்றை வாழ்ந்து காட்ட முயற்சித்தார்: வாழ்ந்து காட்டியவற்றை பிறருக்கு கற்பித்தார். எனவேதான் "நான் கடவுளை நேரடியாகக் கண்டதில்லை . ஆனால் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேமின் உருவிலே, பேச்சிலே, செயலிலே கடவுளைக் கண்டு கொண்டேன்" என்று பாலபிரஜாபதி அடிகளார் போன்ற பலர் ஆயரைப் பற்றி சான்று பகர்கின்றனர்.

**2. 'தொழுநோயாளரின் பாதுகாவலர்' புனித டாமியன் (1840-1889):**

தொழுநோய் எளிதில் அடுத்தவரை தொற்றிக் கொள்ளும் என்றும் இந்நோய் குணமாக்க முடியாத நோய் என்றும் கருதப்பட்டு வந்த காலம். குடும்பத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டார்கள் இந்நோயாளிகள். தொழுநோய் பிறருக்கு தொற்றிக் கொள்ளாமலிருக்க அரச ஆணைப்படி தனிக் குடியிருப்புகளில் வாழ்ந்து வந்தனர் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்த மலாக்காய் வாசிகள். இங்குதான் பாதர் டாமியன் தானாக மனமுவந்து முன் வந்து பணிசெய்தார். 16 ஆண்டுகாலம் இம்மக்களின் ஆன்ம, உடல், உணர்வுபூர்வமான அனைத்துத் தேவைகளையும் நிவர்த்தி செய்தார்.

மலாக்காய் காலணியில் இவர்களுக்காக ஆலயம் கட்டினார்; நீர்த்தொட்டிகள் அமைத்தார்; வீடுகள் கட்டினார்; வீட்டுச் சாமான்கள் உண்டு பண்ணினார்: தொழு நோயாளரின் புண்களைத் தானே கழுவி, மருந்து வைத்தார்; இறந்த தொழுநோயளரின் சடலங்களை

www.malankaralibrary.com

அவரே குழிதோண்டி அடக்கம் செய்தார்; பள்ளிக்கூடங்கள் ஆரம்பித்து கல்வி புகட்டினார்; அனாதை இல்லங்கள் அமைத்தார்; அவர்களை ஆற்றுப்படுத்தி ஆன்மீகத்தை வளர்த்தார். அரசு உதவிகள் பல பெற்றுத்தந்தார். சுருங்கக் கூறின் தந்தை டாமியன் அவர்களுக்கு அனைத்தும் அனைத்துமாயிருந்தார். 'இயேசுவின் பொருட்டு தொழுநோயாளருடன் நானும் என்னை ஒரு தொழுநோயாளியாக ஆக்கிக்கொண்டேன்' என்றார். ஆம் அவர் கூற்றுக்கு ஏற்ப இறுதியில் எந்த நோய்க்கு எதிராக போரிட்டாரோ அதே நோயால் இவர் பாதிக்கப்பட்டு மரணமடைந்தார். இவ்வாறு இரக்கத்தின் மறைசாட்சி' என அவர் அழைக்கப்பட்டார். திருத்தந்தை 15-ம் பெனடிக்ட் இவரை 'புனிதர்' என பிரகடனப்படுத்தினார். இப்புனிதரின் விழாவை மே மாதம் 10-ம் நாள் திருச்சபை கொண்டாடுகிறது.

**3. தொழுநோயாளரின் பாசமிகு தந்தையான நம் ஆயர்:**

தந்தை டாமியனின் தொழுநோயாளர் மீது கொண்ட அன்பு தந்தை லாறன்சையும் வெகுவாக கவர்ந்தது. கைவிடப்பட்ட மக்கள் மீது பொதுவாகவும் தொழுநோயாளர் மீது தனிப்பட்ட முறையிலும் ஆயர் அன்பு செலுத்தினார். ஒரு குரு மாணவனாக மங்களூரில் பயின்று கொண்டிருந்த காலத்திலேயே இவ்வன்பு வெளிப்பட்டது. ஆண்டுகள் கடந்து ஒரு குருவாக பணியாற்றிய காலத்தில் தொழுநோயாளருக்கென்றே ஒரு மருத்துவமனையை பிரப்பன்கோட்டில் அமைக்க இவருக்கு முடிந்தது. இந்நோயால் பாதிக்கப்பட்ட மக்கள் மீது இவர் கொண்டிருந்த ஆழமான அன்பு ஒருபுறம்; பொதுமக்களிடமிருந்து எழுந்த கடும் எதிர்ப்பு மறுபுறம். இவ்விரண்டிற்கும் இடையே பெரும் மனப்போராட்டம் நடத்தி அதில் வெற்றிப் பெற்றார் நம் ஆயர். மக்களுக்கு இந்நோயைப் பற்றிய சரியான அறிவு புகட்டினார்.

மருத்துவ வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு நேரடியாக மக்களுடன் உரையாட வாய்ப்பளிக்கப்பட்டது. 'தொழுநோயை குணப்படுத்த முடியும். தொழுநோயை தொற்றாத நோயாக மாற்ற முடியும்' என்று வழிமுறைகளை எடுத்துக் கூறி மக்களில் நம்பிக்கையை ஏற்படுத்தினார். இவர்களுக்கென்று சிகிட்சை மற்றும் மறு வாழ்வு மையத்தை ஏற்படுத்தினார். நேரடியாக பல வேலைகளில் தானே நோயாளர்களை பராமரித்தார். அவ்வாறு தொழுநோயாளரின் உளப்பூர்வமான அன்பை பெற்றார். இப்பணிக்கு உதவியாக அருட்சகோதரிகளும் இன்னும் சில நல்லுள்ளங்களும் ஒத்துழைத்தன. இவ்வாறு புனித டாமியன் தந்தையை போன்று நம் ஆயரும் தொழுநோயாளரின் பாசமிக்க தந்தையாக விளங்கினார்.

**4. பாபா ஆம்தேவை சந்திப்பு:**

ஆயர் லாறன்ஸ் பட்டம் பேராயர் இல்லத்தில் வாழ்ந்து வந்த காலம். குமரி மாவட்டத்தில் ஒரு குருவாக பணியாற்றிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பல பணிகளையும் தொடர்ந்து ஊக்கப்படுத்தி வந்தார்.

அக்காலத்தில் ஒருநாள் தொழுநோயாளர் தோழனாக விளங்கிய சமூக ஆர்வலர் பாபா ஆம்தே திருவனந்தபுரம் வழியாக தமது வாகனத்தில் படுத்தபடியே பயணம் செய்தார். 1985 - ம் ஆண்டு குமரி முதல் காஷ்மீர் வரையிலான இந்திய மக்களிடையே நல்லுறவையும் சுற்றுச்சூழல் பராமரிப்பையும் ஊக்குவிக்கும் வண்ணம் "Knit India" என்ற இயக்கத்தை இவர் ஆரம்பித்து இவ்வியக்கத்தை பரப்பும் வண்ணம் இப்பயணத்தை அவர் மேற்கொண்டார். அப்போது ஆயர் லாறன்ஸ் பட்டம் தேசிய நெடுஞ்சாலை ஓரத்தில் அவர்களை நிறுத்தி அவருக்கு பூக்கொத்து கொடுத்து அன்புடன் வரவேற்று பேசி தன் அன்பையும் ஆதரவையும் தெரிவித்தார்.

அப்போது அவருடன் கூட இருந்த குருக்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் இப்பெரிய சமூக ஆர்வலரை அறியவும் அவரது பெரிய உள்ளத்தை சொந்தமாக்க முயற்சிக்கவும் முடிந்தது. ஒதுக்கப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக தொழுநோயாளருக்கு மறுவாழ்வு அளித்த பாபா ஆம்தேயின் கூற்று இங்கு கவனிக்கத்தக்கது. "நான் என் ஆன்மாவைத் தேடினேன். ஆனால் என்னால் அதை கண்டடைய முடியவில்லை; நான் என் கடவுளைத் தேடினேன், ஆனால் என் கடவுள் என்னை விட்டு அகன்று சென்று விட்டார்;

www.malankaralibrary.com

இறுதியாக நான் என் சகோதர சகோதரிகளைத் தேடினேன்; அப்போது அவர்களில் நான் மூன்றையும் கண்டடைந்தேன்" என்பதே அக்கூற்று.

**5. பிற்படுத்தப்பட்டோர் நலன்:**

அறியாமையாலும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளாலும், சமூக பாகுபாடுகளாலும் ஒதுக்கி வைக்கப்பட்ட தனி நபர்களையும், சமூகங்களையும் ஆயர் லாறன்ஸ் அதிகமாக அன்பு செய்தார். அவர்களின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக பல போராட்டங்கள் நடத்தினார். குறிப்பாக இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் பொதுச் செயலராக இருந்த காலத்தில் மற்ற தலைவர்களுடன் இந்திய தலைநகரில் தலித் கிறிஸ்தவர்களுக்காக பல பொதுக் கூட்டங்களும், பேரணிகளும் நடத்தினார். நம் குமரி மாவட்ட நாடார் சமூதாயத்தைச் சார்ந்த மலங்கரை கத்தோலிக்க மக்களுக்கு சாதி வாரியான பிற்படுத்தப்பட்டோர் நிலை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பொதுநல ஆர்வம் கொண்ட சில சகோதரர்களுடன் இணைந்து பெரும் முயற்சி எடுத்து அதில் வெற்றியும் கண்டார்.

**6. கைவிடப்பட்டோர் நலன்:**

மனநலம் குன்றியோர், வறுமையில் வாடுவோர், போதைக்கு அடிமையானோர், ஆதரவற்ற பிள்ளைகள், முதியோர் ஆகியோர் மீது ஆயருக்கு இருந்த பரிவும் கரிசனையும் எவராலும் மறக்க முடியாது. கன்னியாகுமரியில் கடற்கரையில் யாருமின்றி கைவிடப்பட்ட நிலையில் கண்டு கொண்ட ஒரு சிறுவனை இறுதிவரை "தன் பராமரிப்பிலே வளர்த்து வந்தார். ஆதரவற்ற மகளிரை அருட்சகோதரிகளுடைய இல்லங்களில் அவர்கள் பராமரிப்பில் வளர்த்து வந்தார். இவரது இதய பூர்வமான இச்செயல்கள் உடன் பணியாற்றிய குருக்களுக்கும், துறவியருக்கும், பொதுநிலையினருக்கும் ஒரு இறை தூண்டுதலாக இருந்தது.

**7. மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி:**

1990-களில் சுகாதாரப் பணிகளின் ஒரு பகுதியாக HOM-வாலண்டியர்களால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி மார்த்தாண்டம் பகுதியில் அதிக அளவில் மனவளர்ச்சிக் குன்றிய பிள்ளைகள் இருப்பது தெரிய வந்தது. பல குழந்தைகள் தத்தம் வீடுகளிலேயே முடங்கிக்கிடந்து வீட்டுக்கும் சமூகத்திற்கும் சுமையாக இருந்த நிலையை அறிந்த ஆயர் லாறன்ஸ் அவர்களுக்கான ஒரு பயிற்சிக் கூடத்தை ஆரம்பிக்க விரும்பினார். அதன் தொடக்கமாக 1996-ம் ஆண்டு 4 தாய்த் தலைவிகளை திருவனந்தபுரத்தில் அமைந்திருந்த Central Institute of Mental Retardation என்ற சிறப்பு பயிற்சி மையத்தில் பயிற்சிக்காக தாமே அனுப்பி வைத்தார். இருப்பினும் அவர் கனவு நனவாகுமுன் ஆயர் லாறன்ஸ் இவ்வுலக வாழ்வை முடித்து விண்ணகமெய்தினார்.

அவர் விருப்பத்தை தொடர்ந்து HOM - ன் பொறுப்பை வகித்த தந்தை மரிய அற்புதம் நிறைவேற்றினார். இவ்வாறு HOM-மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிக்கூடம் 1997-ம் ஆண்டு குழித்துறையில் ஆரம்பிக்கப்பட்டு அன்று முதல் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த 'மனதளவில் சவால் விடப்பட்ட பிள்ளைகள்' பலர் பயிற்சி பெற்று பலன் அடைந்து வருகின்றனர். இப்பள்ளிக்கூடம் இன்றும் சீரிய பணியாற்றி வரும்போது, ஒதுக்கப்பட்ட மக்கள் மீது ஆயர் கொண்டிருந்த தனிக்கவனம் காண்போர் மனதில் ஆழமாக பதிகிறது.

**8. முடிவுரை**:

இறுதி நாளில் நம் வாழ்வை கடவுள் மதிப்பிடும் போது, "மிகச் சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்லுகிறேன்" (மத் 25:40) எனக் கூறும் வார்த்தைகளை ஆயரின் பணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

www.malankaralibrary.com

தனிச்சுற்று